விலை ரூபா 2-00 ✭ 8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 வைகாசி 20 றம்ழான் 12 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (2—6—85) இதழ் 112

## இரு நாட்களில் 100 பேருக்கு 'விசா'

(கொழும்பு)

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இருதினங்களில் பிரிட்டிஷ் தூதரகம் 1'0 இலங்கையருக்கு பிரிட்டன் செல்வதற்கான 'விசா' வழங்கியுள்ளது என்று பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்துள்ளார். (8-ம்பக்கம் பார்க்க)

### ஜனதிபதி நேற்று புதுடில்லி சென்றார்

# ரஜீவ் - ஜே. ஆர். பேச்சு இரு கட்டமாக நடைபெறும்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியுடன் பேச்சு நடத்துவதற்காக் இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றிரவு விமானமூலம் புதுடில்லி போய்ச் சேர்ந்துள்ளார்.

புதுடில்லி விமான நிலையத்தில் இந்திய ஜனதிபதி திரு. ஜானி ஸெயில்சிங், பிரதமர் திரு ரஜீவ்காந்தி, வெளியுறவு இலை அமைச்சர் ஜனப் குர்ஷித் ஆலம்கான் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

இன்று இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக இரு தலைவர்களும் முக்கய பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பார்கள், இப்பேச்சுவார்த்தைகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். இரு கட்டமாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் முதல் கட்டத்தில் இந்தியப்பிரதமரும், இலங்கை ஜனதிபதியும் உதவியாளர்கள் எவரு

[8ம் பக்கம் பார்க்க]

## மீண்டும் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

கொள்ளை முயற்சி காரணமாக மூடப்பட்டிருந்த கொக்குவில் தபால்அலுவலகம் மீண்டும் நாளை தொடக்கம் இயங்கவுள்ளதாக அலுவலக தபால் அதிபர் தெரிவிததுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்கள் காரணமாக கொக்குவில் தபால் அலுவலகமும் கடந்த ஜனவரி 24 ம் திகதி மூடப்பட்டது.

பொது மக்கள் நலனை உத்தேசித்து இப்பகுதி விழிப்புக் குழு தபால் அலுவலக ஊழியர்கள், தபால் அதிபர், பிரதேச தபால் அத்தியட்சகர்

[8-ம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் பகுதிமக்கள் வெளியேற வேண்டாம்

### பிரஜைகள் குழுத்தலைவர் கருத்து

(வவனியா)

செட்டிகுளம் பகுதி மக்கள் பீதிகொண்டு அங்கிருந்து வெளியேறுவது புத்திசாலித்தனமல்ல என்று வவனியா பிரஜைகள் குழு தலைவர் சட்டத்தரணி எக்ஸ், சொர்ணபாலா 'ஈழநாடு'விடம் தெரிவித்தார்.

செட்டிகுளம் பகுதி மக்களை அங்கிருந்து வெளியேறும்படி பகிரங்க ஒலிபெருக்கி மூலம் தெரிவித்த அறிவித்தலை அரசு மறுத்துள்ளதைக் கருத்தில் கொண்டு இப்பகுதி மக்கள் பயம், பீதி கொள்ளாது தங்கள் குடியிருப்புக்களிலேயே இருக்கும்படி இவர் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பான ஏதேனும் விட

(8ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் கல்வீச்சு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே போக்குவரத்துச் சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் மற்றும் வாக

(8ம் பக்கம் பார்க்க)

### பண்டாரியின் இலங்கை விஜயம்-

## இந்தியப் பிரதமர் திருப்தி 'இந்து' பத்திரிகை கருத்து

(புதுடில்லி)

இலங்கைத்தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவே முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதனை இலங்கை ஜனதிபதி திரு.ஜே. ஆர்.ஜெயவர்த்தன உணர்ந்துள்ளார் என்பதனை இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியின் விஜயம் உணர்த்தியுள்ளது என்று 'இந்து'பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது

கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரம் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் அது குறித்து திருப்தி கொண்டுள்ளார் திரு. பண்டாரி இலங்கைத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் என்ன விதமாக உடன்பா காணப்பட்டது என்பது தெரியாமல் உள்ளது.

இதேவேளை' தமிழ்போராளிகள்' வன்செயல்களை கைவிட வேண்டுமென்றும் இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளுக்கு பாக்குநீரிணை வழியாக

(8ம் பக்கம் பார்க்க)

## வவனியா அரச அதிபர் மறுக்கிறார்

[யாழ்ப்பாணம்]

செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் உள்ள சில கிராமங்களிலிருந்து அங்கு நிரந்தரமாக வசித்து வந்த பல குடும்பங்கள் அச்

[8ம் பக்கம் பார்க்க]

### எரிபொருள் தட்டுப்பாட்டின் எதிரொலி

## வ.போ.ச.பஸ் சேவைஸ்தம்பிதம்; மினிபஸ் கட்டணம் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் எரிபொருள் தட்டுப்பாட்டினுல் வ. போ. ச. பஸ்சேவை ஸ்தம்பித்ததுடன் மினி பஸ் கட்டணம் இருமடங்கிற்கு மேலாகஅதிகரித்து விட்டது.

டீசல்பெறமுடியாமல் இருப்பதாக தெரிவித்து மினி பஸ்ஸில் இருமடங்கு கட்டணம் அறவிடப்பட்டதாக கூறப்படுகிறது. வான்களிலும் இருமடங்கு கட்டணம் அறவிடப்பட்டதாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு 6 ரூபாவும், சாவகச்சேரியிலிருந்து கொடிகாமத்திற்கு 4 ரூபாவும் அறவிடப்பட்டது இதே போன்று சகல இடங்களிலும் மினிபஸ் கட்டணம் அதிகரித்துள்ளது.

கிளிநொச்சியிலும், வவனியாவிலும் டீசலுக்கும், பெற்ரோலுககும் தடடுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மினி பஸ்கள் வழக்கமானசேவைகளை நடத்த முடியாமல் போய்விட்டதாகக்

[8ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு சென்ற லொறி கடத்தப்பட்டது

### சாரதி, கிளீனர் தாக்கப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம்' செத்தல் மிளகாய் கொண்ட மூடைகளை கொழும்புக்கு ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கடத்திச் செல்லப்பட்டதுடன்,சாரதியும்கிளினரும் பலத்த வாள் வெட்டுக்கிலக்காகிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

வவுனியாவுக்கும் ஈரப்பெரியகுளத்துக்குமிடையில் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்தவருக்குச் சொந்தமான லொறியே கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகி

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல்

[கொழும்பு]

திருகோணமலையிலுள்ள இரு கிராமங்களை தீவிரவாதிகள் தாக்கி 5 பேரை கொன்றுள்ளதாகவும் 3 பேரை காயப்படுத்தியதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இச்சம்பவத்தில் 50 வீடுகள் தீக்கிரையாக்கப்

(8ம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டியில் ஒதுங்கிய இந்திய பாய்மரக் கப்பல்

(கொழும்பு]

புயலினுல் பாதிக்கப்பட்ட இந்திய பாய்மரக்கப்பல் ஒன்று இலங்கையின் கற்பிட்டி கடல் பகுதியில் நேற்று கரைஒதுங்கியுள்ளது.

இந்தக் கப்பல் கற்பிட்டி கடலில் கரையொதுங்கிய போது புத்தளம், ஆனைமடுவ பகுதி மக்கள் தமிழ்த் தீவிரவாதிகள் வருகின்ருர்கள் என்று நினைத்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கரையில் உசார் நிலையில் நின்றனராம் பின்னர் அக்கப்பல் புயலுக்கு ஒதுங்கிய கப்பல் எனத் தெரிந்து கொண்டனர்.

இக் கப்பலில் 100 மூடை வெங்காயம் அழுகிய நிலையில் காணப்பட்டது.10 பேர் இதில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

## ஒரு லட்சம் ரூபா கையாடல்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவுச்சங்கம் ஒன்றிலிருந்துகாசோலைமூலம்ரூபா 1லட்சம் அச்சங்க காசாளரால் கையாடப்பட்டுள்ளதாக கூட்டுறவு ஆணையாளருக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் - இணுவில் தெ ப உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்தே சுமார் ஒரு லட்சம் ரூபா கையாடப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[மா]

# விளம்பரம்

## விற்பனைக்கு

சித்தங்கேணி டச் வீதியில் 100யார் தூரத்தில் தென்னங் கன்றுகள், நல்லதண்ணி உள்ள விடும் வளவும் 5½பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மனேச்சர் கதிரேசு, ஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை. 3460

''கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில் 1 பரப்புக் காணியும் மின்சாரம் சகல வசதியும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. விலை. ரூ 1,65,000/- விபரங்களுக்கு 3 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும் வி. ரவீந்திரன் 134. கச்சேரி நல்லூர் வீதி, முத்திரைச்சந்தை.

3480

20'' கலர் சொனி T. V, NV300டெக்கும் உடன் விற்பனைக்குண்டு அ. றவி, 37/3, நாவலர் றோட். நாவாந்துறை, யாழ்ப்பாணம். 3556

சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 1½ பரப்பு காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி S. சின்னப்பு, சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

3531

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கல்லூரிக் கண்மையில் மானிப்பாய் வீதியில் கடை கட்டுவதற்கு வ சதியாகவும் நல்ல சூழ்நிலையில் காணித் துண்டு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 93, மானிப்பாய் வீதி, யா ழ் ப் பா ணம். (விபரங்களுக்கு 3மணிக்கு பின் தொடர்புகொள்ளவும்)

3550

கோப்பாய் பூதர்மடத்தடியில் பருத்தித்துறை வீதிக்கு மேற்குப் புறத்தில் 50யார் தூ ர த் தி ல் 5 பரப்புக்காணி இருபக்க போக்குவரத்து வசதிகளுடன் இரண்டு வீடுகள் அமைக்கக் கூடிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய மு க வ ரி: ஞா. ஸ்ரீதரன். மே/பா ந. குழந்தைவேலு, பூதர்மடத் தடி, கோப்பாய். 3561

நவாலி அரசடி சந்திக்கு அருகாமையில் 2 ரப்பு காணியும் வீடும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. T. பாலசிங்கம் குவைஸ் கிறீம் ஹவுஸ் ஜின்னு வீதி, யாழ்ப்பாணம். 3576

மு ள் ளி ய வ ளை தண்ணீர் ஊற்று பழைய எரிபொருள் நிலயத்திற்கருகில் நல்ல வியாபாரம் நடைபெற்ற கடைதளபாடப் பொருட்களுடன் விற்பனைக்கு அல்லது கொமிசனுக்கும், முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கருகில் வீட்டிற்கு அத்திவாரம் இடப்பட்ட ஏழு 7) பரப்பு காணி வி ற் ப னை க் கு ம் உண்டு. தொடர்பு: த. பரம்சோதிநாதன், கைதடி நுணுவில், சாவகச்சேரி. 3565

வீடியோ கமரா, டெக், T. V, கலர் மிக்ஸர், லைட்ஸ், சிங்கர் தை யல் மெசின், றேடியோ, மோட்டார் சைக்கிள், வீட்டுத் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மட்டும் சந்திக்கலாம் தர்மாஸ் போட்டோ, 50, விதானையார்வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். 3563

தஞ்சாவூர் வீணை, தையல் மெஷின்- (Singer) விற்பனைக்குண்டு. தொடர்பு: 601/3 A. கே. கே. எஸ். றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 3564

## விற்பனைக்கு

கட்டுடையில் 28 1/2 பரப்புக் காணி விற்கப்படும். மில்லுக்கும் பண்ணை நடத்துவதற்கும் உகந்த இடம் மின்சாரம் பெறக் கூடிய வசதியும் லொறிப் பாதையும் உண்டு. ப ர ப் பு விலை 5,000 ரூபா தொடர்பு: இளையதம்பி வயிரவநாதன், கட்டுடை, மானிப்பாய். (3521)

கல்வியங்காட்டில் புதுச்செம்மணி றோட்டில் மூன்று பரப்பு காணி வி ற் ப னை க் கு ண் டு. தொடர்பு க. கணபதிப்பிள்ளை, 49 இராமநாதன் வீதி நாயன் மார்கட்டு யாழ்ப்பாணம். 3582

யாழ் வேம்படி வீதியில் திருக்குடும்ப ஆங்கில பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுமுள்ள 1 3/4 பாப்பு காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க:- 63, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். [3579]

நல்ல நிலையில் சைக்கிள்கள் [லேடீஸ், ஜென்ஸ்] புதிய கெசியோ [Multialarm] கைக் கடிகாரங்கள். குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு தொடர்பு: இல, 1 செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர். [3570]

ஆண் அல்சேஷன் நாய்க் குட்டி மூன்று மாதம் Wormed and Weaned Pure Breed OLD No. 181, கோவில் வீதி, நல்லூர். [3538]

வீட்டுத் தோட்டப்பாவனைக் கேற்ற யூரியா உரவகைகள்:- ம ர க் க றி, விசேஷபூக்கள், வாழை, அன்னுசி, தோடை, எலுமிச்சை, மி ள கா ய், தென்னை, றேசா, ச ப் பா த் திப்பூ ஏனையவற்றிற்கும் விற்பனைக்குண்டு M. G. M And Stores, 777, கே. கே. எஸ். வீதி And208 முதலாம் குறுக்கு தெ ரு, யா ழ் ப் பா ண ம் போன்:-222611. 3591

நியூ புஸ்ப்பா ஐ ஸ் கி றி ம் கொம்பனி சகலவிதமான தளபாடங்களுடனும் விற்பனைக் குண்டு விபரங்களுக்கு உரிமையாளர் எஸ். க ன க லிங் க ம், ''நியூ புஸ்ப்பா ஐ ஸ் கி றி ம் கொம்பனி ஆறுகால் ம ட ம், ஆனைக்கோட்டை. 3586

Sony Stereo Walkman Set. T. V கலர் 22'', Hitachi வீடியோ ரெக், ரேடியோ(2in1 with Box), Vaccum Cleener (Hoover), Washing Machine உடன் வி ற் ப னை க் கு ண் டு தொடர்பு: ''திருப்பதி'' சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு (3596)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் மூன்று படுக்கை அறைகள் கொண்ட மேல் வீடு வாடகைக்கு உண்டு இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உண்டு. விரும்பியோர் வே. கந்தசாமி, 182/1 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். [3569)

சாவகச்சேரி கச்சாய் றோட்டில் பலசரக்குக்கடை தளபாடங்களுடன் உடனடியாகவாடகைக்கு கொ டுக்கவுண்டு. தொடர்பு அரியராசா இல 4 கயிலாயபிள்ளை வீதி சாவகச்சேரி., இல. 1 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூர் யாழ்ப்பாணம். [3554]

பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அண்மையில் 4அறைகளுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும்மே/பா உபதபாற் சுந்தோர், நல்லூர் யாழ்ப்பாணம். (3559)

## வாடகைக்கு

சுண்டுக்குளி கா ட் டு க் க ந் தோர் ஒழுங்கையில் இலக்கம் 34A, மூனறு படுக்கை அறையுடன் நவீன வசதிகளுடைய வீடு வா ட கை க் கு ண் டு தொடர்பு: 34, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி. 3555

## தேவை

மூன்று வருட அனுபவமுள்ள சாறி பிளவுஸ் வெட்டித் தைப்பதற்குரிய பெண்கள் உடன் தேவை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நாகுன் ரெக்ஸ்ரைல்ஸ். இல179 நவீன சந்தை யாழ்ப்பாணம். [3581]

மினி தியேட்டர் உபயோகத்திற்கு தேவையானT. Vலென்ஸ் 40 அங்குலத்திற்கு மேற்பட்டது உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும் அதிபர், ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 24175 (3577)

## மணப்பந்தல்

யாழ். இந்து வேளாள சமூகத்தைச் சேர்ந்த உயர்கல்வி கற்று ஜேர்மனியில் நல்ல உத்தியோகம் பார்க்கும் 35 வயதுள்ள மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட ம ண ம க ள் தேவை மணமகள் அங்கு வசிப்பவராகவோ அல்லது அங்கு சென்று விவாகம்செய்யவிருப்பமுள்ளவராகவோ இருத்தல் வேண்டும். படத்துடனும், குறிப்புடனும் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3513 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3513

யாழ். இந்து உயர்வேளாள கு ல த் தை ச் சேர்ந்த தனித் தொழிலில் மாதவருமானம் 2000/-எடுக்கக் கூடிய 38 வயதுடைய நபருக்கு இரண்டாந் தாரமாக அழகும் பண்புமுள்ள மணப்பெண் தேவை. வயது 30க்குமேல் இருப்பது விரும்பத்தக்கது. சீதன விபரம் குடும்பவிபரம், ஜாதகக்குறிப்பு புகைப்படம் என்பவற்றை அனுப்பிவைக்கவும்: ஜாதகக் குறிப்பு புகைப்படம் என்பன திருப்பிஅனுப்பிவைக்கப்படும். விபரங்களுக்கு: விளம்பர இல 3583, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3583

யாழ். இ ந் து உயர்குல 37 வயதுடையவரும், கொழும்பில் பிரபலதனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றுபவரும், I. C. M. A சோதனை சித்தியடைந்து வெகுவிரைவில் வெளிநாடொன்றிற்கு கணக்கியலாளராக கடமையாற்றச் செல்லவிருப்பவரும் நல்லொழுக்கமும் பண்பும் அ ழ கு ம் திடகாத்திரமுள்ள 8ல் செவ்வாய் தோஷமுள்ள மணமகனுக்கு அழகும் பண்பும் கல்வியறிவுமுள்ள மணமகள் தேவை தொழில் செய்யும் பெண் விரும்பத்தக்கது சீ த ன வி ப ரம், குடும்பவிபரம், ஜாதகக் குறிப்பு புகைப்படம் என்பவற்றை அனுப்பி வைக்கவும் ஜாதகக்குறிப்பு புகைப்படம் என்பனதிருப்பி அனுப்பிவைக்கப்படும் விபரங்களுக்கு விளம்பர இல:- 3572 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 3572

யாழ். உயர்வேளாள குல பிறவிச்சைவ பெ ற் றோர், தமது உயர்கல்வி கற்று தற்போது விவசாயத்தினை தொழிலாகக்கொண்ட 35 வ ய து மகனுக்கு ஏற்ற பிறவிச்சைவ மணமகளை விரும்புகின்றனர் தகுதியுடையோர் குடும்ப விபரம் ஜாதகம், பிறந்தநேரம். புகைப்படம், சீதனம் போன்ற விபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொ ள் ள வும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். விபரங்கள் வெளியிடப்பட மாட்டாதென உறுதியளிக்கின்றோம் விளம்பர இல. 3557 C/o ஈ ழ நா டு யாழ்ப்பாணம். 3557

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

வட்டுக்கோட்டை மேற்கு நாகனுதபிள்ளை ஏகாம்பரத்தின் மரணசாதன விடயமாக.

காலஞ்சென்றவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல:3829

ஏகாம்பரம் கைம்பெண் சொர்ண லட்சுமியம்மாள் மூளாய் றோட்டு, வட்டுக் கோட்டை

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள தெனவும் 1984-ம் ஆண்டு கார்த்திகை 27-ம் திகதி அன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு குலசிங்கம்
பதிவாளர்.

1984-ம் ஆண்டு கார்த்திகை 27-ம் திகதி.

வரைவு
எம்.கே.சுப்பிரமணியம்
மனுதார் தரணி

3523

## விற்பனைக்கு

சியாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சியாக்காய்ப் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores,777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி; 22611 [2820]

## லொறி கடத்தல்

(வவனியா)

கடந்த மாதம் கொழும்பிலிருந்து திருக்கோணமலை வவனியா ஊடாக யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனியார் லொறி ஒன்று வவனியா ஹெறவப் பொத்தானை வீதியில் 6-ம் கட்டை என்ற இடத்தில் காணமல் போய்யுள்ளது.

கொழும்பிலிருந்து புறப்பட்ட குறித்த லொறியில் நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் இருந்ததாக தெரியவருகின்றது.

லொறிச் சாரதி எஸ். சண்முகலிங்கம் (வேலணை], கிளினர் ரி ராஜசேகரம் (சுழிபுரம்) இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

லொறி காணுமல்போன விடயம் தொடர்பாக வவனியா பொலிசாருக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணையினை நடத்திய பொலிசார் சிலரைக் கைது செய்துள்ளனர்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

2-6-1985

தோற்றம்: 25-01-1926 மறைவு:03-05-1985

### அமரர் அருணாசலம் அப்பாசாமி

(தெண்டபாணி முதலாளியார்)

வல்வெட்டித்துறை.

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கு பற்றிய சகலருக்கும் அனுதாபசெய்தி தெரிவித்த நண்பர்கள், உறவினர்களுக்கும் 2-6-1985 ஞாயிறு காலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக் கடற்கரையில் அன்னாரின் ஆஸ்தி கரைக்கப்படும் என அறியத்தருகின்றோம் வீட்டு சபண்டியிலும் பங்குபற்றி செல்லுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்மார்.

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

3587

## 2வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

### சந்திரேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(மருதனுமடம், இராமநாதன் கல்லூரி உயர்வகுப்பு மாணவி)



தோற்றம்:
7-6-1963

மறைவு:
26-5-1983

நீர் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றுலும் உம்மை ஒரு கணமும் மறக்கவில்லை. எமது இல்லத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத்தெய்வமே. உமது பிரிவால் வாடி நிற்கும்:

அன்பு ஐயா அம்மா, சகோதர சகோதரிகள், அண்ணி, மருமகன் கஸ்ரோ, உற்றூர், உறவினர், நண்பர்கள்.

1.B, பிரப்பங்குளம் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

3595

ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR

## இயற்கை அழிவுகளிலிருந்து தன்னைப் பாதுகாக்க

# இனியாவது பங்களாதேஷ் விழித்துக் கொள்ளுமா?

வங்காளத்தின் ஒரு பகுதியாக அமைந்த பங்களாதேஷ் என்ற நாட்டில் அண்மையில் இடம்பெற்ற பெரும் சூறாவளியினால் சுமார் 40,000 மக்கள் இறந்ததோடு பலரையும் காணவில்லை. பெரும் பொருட் சேதங்களை ஏற்படுத்திய இந்த கொடிய சூறாவளியினால் பல கரையோரத் தீவுகளும் அழிக்கப்பட்டுள்ளன. இந்நாட்டில் சூறாவளி ஏற்படுவதற்கான காரணங்களும், அதன் நிகழ்வுகளும இங்கு விளக்கப்படுகின்றன.

வங்காள தேசப்பகுதி அடிக்கடி இயற்கை அழிவுகள் இடம்பெற்று வரும்பிரதேசமாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் இயற்கை அழிவுகளின் தாக்கத்தை வரலாற்று ரீதியிலும் காணமுடிகின்றது. வங்கப்பகுதியில் ஏற்பட்ட பொருந் தொகையான மக்கள் இறப்பிற்குக்காரணம் இயற்கை அழிவுகளே.

உலகின் வேறெந்த பிரதேசத்திலும்பார்க்க இன்று வங்காள தேசம் அடிக்கடி இயற்கை அழிவுகளுக்குட்படுகின்றது. இந்தநாட்டில் ஏற்பட்டுவரும் இயற்கை அழிவுத் தொடரில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளிதாக்கத்தால் ஏற்பட்ட அழிவுகள் பெரியதொன்றாகும். இச்சூறாவளியின் தாக்கத்தால் இறந்தவர்கள், காணாமற்போனவர்கள், பாதிக்கப்பட்டவர்கள்பற்றிய புள்ளி விபரங்களும், பொருளாதார சேத மதிப்பீடும் இன்றும் உத்தியோக பூர்வமாக அறிய முடியவில்லை. எனினும் இறந்தவர்கள் எண்ணிக்கை 40,000 பேருக்கு மேற்பட்டு இருக்கலாமெனவும், ஒருலட்சம் பேருக்கு மேற்பட்டவர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கலாமெனவும் கொள்ள இடமுண்டு. 1970 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளிக்குப்பின்னர் இதுவே கூடிய சேதம் விளைவித்த சூறாவளியாகும். 1970 ம் ஆண்டு சூறாவளியின் தாக்கத்தால் ஒரு லட்சம் பேர்வரை இறந்தார்கள், டலலட்சம் பேர் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள்.

### பாகிஸ்தானின் அலட்சியம்

அன்று ஆட்சியாளராக இருந்த பாகிஸ்தான் தகுந்த முறையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளாது, அலட்சியமாக இருந்ததே வங்காளதேச தனிநாட்டுக்கோரிக்கைக்குக் காரணமாக இருந்தது. 1970இல் வங்காளதேசத்தில் ஏற்பட்ட சூறாவளியே அந்த நாட்டில் அரசியற் சூறாவளியைத் தோன்றுவித்து தனிநாடு பிறப்பதற்கு உருவெடுத்தது.

வங்காள தேசத்தின் மொத்த நிலப்பரப்பு 55,000 சதுரமைல் இந் நாட்டின் இன்றைய குடிசனத்தொகை 90 மில்லியனுக்கு மேற்பட்டதாகும். சதுரமைலுக்கு சராசரி குடிசன அடர்த்தி மிகவும் உயர்வாக இருப்பதுடன் மொத்த குடிசனத் தொகையில் 93விகிதத்தினர் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராமங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியதாக இருக்கிறதுடன் அடிக்கடி நிகழும் இயற்கை அழிவுகளினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

## வங்காளதேச மக்கள் வருடத்தில் எட்டுமாதங்கள் சூறாவளி அபாயத்தை எதிர்நோக்குகிறார்கள்!

### 8 மாதங்கள் புயல் அபாயம்

வங்காள தேசம் அடிக்கடி இயற்கை அழிவுகளுக்கு உட்படுவதற்கு பல இயற்கை காரணிகள் காரணமாக இருக்கின்றன. இப்பிரதேசம் சூறாவளி அடிக்கடி உருவாகும் வங்காள விரிகுடாப் பகுதியில் அமைந்திருப்பதால் வருடத்தில் எட்டு மாதங்கள் வரை சூறாவளியின் செல்வாக்குக் காணப்படுகிறது மேலும் இப்பிரதேசம் ஒரு ஆற்றுச் சமவெளியாக இருக்கின்றது. வங்காள தேசத்தில் சிற்றகொங்,சியல்கட் குன்றுப் பகுதிகள் தவிர ஏனைய பிரதேசம் முழுவதும் கங்கை, பிரமபுத்திரா ஆறுகளின் கழிமுகப் பகுதியாக இருக்கின்றது. ஆற்றுக் கழிமுகப் பகுதியாக இருப்பதால் அடிக்கடி வெள்ளப் பெருக்குக்குட்படுகின்றது.

வங்காளதேசமும் அதன் அயற் பகுதியான வடகிழக்கு இந்தியாவும் கூடுதலான மழைவீழ்ச்சிபெறும் பிரதேசங்களாக இருக்கின்றன. அசாம் மலைப் பகுதிகளில் சராசரி வருடமழை வீழ்ச்சி 200 அங்குலம் வரை காணப்படுகின்றது வங்காளதேசமும், அயல் இந்தியப் பிரதேசமும் கூடுதலான மழையை குறித்த மொன்சூன் பருவகாலத்தில் பெறுவதால் இப் பிரதேசம் வெள்ளப் பெருக்குக்குட்படுகின்றது. மேலும் மழை வீழ்ச்சியுடன் சூறாவளி இயக்கங்கள் தொடர்புடையவதாகக் காணப்படுவதால் சூறாவளிகள் கடுமையாக இருக்கும்பொழுது காற்றினாலும்பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன. சூறாவளிகள் கடுமையாக இருக்கும்பொழுது கடல் கொந்தளிப்பும் கடல் நீர் உட்புகுவதும் அடிக்கடி ஏற்படுவதுடன் கரையோர தாழ்நிலங்கள், தீவுகள் கடல் நீருள் கீழ்சென்று விடுகின்றன. அண்மையில் இடம்பெற்ற சூறாவளியின் போது கடலலை 45 அடி உயரம் வரை எழுந்தது. இதனால் சிற்றகொங் கரைப்பகுதியிலிருந்த பல தீவுகள் நீருள் மூழ்கின. பல சந்தர்ப்பங்களில் சூறாவளி, வெள்ளப்பெருக்கு, கடல் கொந்தளிப்பு, கடல்நீர் உட்புகுதல் ஆகிய இயற்கை அழிவு சக்திகள் ஒரே நேரத்தில் தொழில்படுவதால் அழிவு மிகவும் கூடுதலாக இருக்கின்றது.

வங்காளப் பகுதியைத் தாக்கும் சூறாவளிகள் அயனச் சூறாவளிப் பிரிவினைச்சார்ந்தவை. இவைகளின் அழிவு சக்தி மிகவும் கூடுதலாகும் வங்காள விரிகுடாப் பகுதியில் உற்பத்தியாகும் சூறாவளிகள் கடல் வழியாக சென்று கரைப்பகுதியைத் தாக்கி சிறிது தூரம் தரை வழியாகச் சென்று வலுவிழக்கின்றன. வங்காள விரிகுடாப்பகுதி அடிக்கடி சூறாவளி தோன்றும் பகுதியாக விருப்பினும் ஏப்பிரலிலிருந்து டிசெம்பர்வரைசூறாவளிநிகழ்வுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. எனினும் ஜூன் ஜூலை மாதங்களில் ஏற்படும் சூறாவளிகளே வங்காள தேசத்தைத்தாக்குகின்றன இக்காலத்திலேயே வங்காளதேசம் கூடுதலாக மழையைப் பெறுகின்றது நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படும் சூறாவளிகள் இலங்கையின் வடபகுதி, கிழக்குப் பகுதி, தமிழ் நாடு, ஆந்திராக்கரையோரங்களையே கூடுதலாகத்தாக்குகின்றன.

1964 ஆம் ஆண்டு டிசம்பரில் வட இலங்கையை பெரிய சூறாவளியொன்றும் 1978 ஆம் ஆண்டு நவம்பரில் கிழக்கிலங்கையை பெரிய சூறாவளியொன்றும் தாக்கி கூடுதலான சேதங்களை விளைவித்தன.

சூறாவளிக் குழப்பங்களில் பல்வேறுவகைகள் காணப்படுகின்றன பொதுவில் இக்குழப்பங்களை நான்காகப்பிரிப்பார்கள்

1. அயனக்குழப்பம் 2. அயனத்தாழமுக்கம் 3 அயனச்சூறாவளி 4. ஹரிக்கேன் அல்லது தைபூன்வகைச் சூறாவளி.

அயனக்குழப்பங்கள் அயனப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படுகின்றன இதில் காற்றுச்சுற்றோட்டம் நன்கு விருத்தியாவதில்லையாம் மேலும் காற்றின் வேகம் மிகவும் குறைவாக இருப்பதாலும் இதனால் ஏற்படும் சேதம் மிகக்குறைவு. பொதுவில் நல்ல மழைகிடைக்கும். அயனத்தாழமுக்கவகைச் சூறாவளிகளில் காற்றுவேகம் மணிக்கு 20-30 மைலுக்கு இடைப்பட்டு காணப்படுகின்றது விவசாயபயிர்களுக்கு சேதம் இதனால் ஏற்படுவதுவழக்கம் மூன்றாவது வகையான அயனச் சூறாவளியில் காற்று சுற்றோட்டம் நன்குவிருத்தி பெற்றிருப்பதுடன் காற்றின்வேகம் மணிக்கு 75 மைலுக்கு உட்பட்டிருக்கும். போபோட் அளவுத்திட்டபடி 6-12க்கும் இடைப்பட்டிருக்கும் காற்று கடுமையாக இருப்பதுடன், கூடியமழைவீழ்ச்சியும் கிடைக்கும்இத்தகையசூறாவளி ஏற்படும்பொழுது புயல் சுழி,வெள்ளப்பெருக்குஏற்படலாம்தென் சீனப்பகுதியில் ஏற்படும் சூறாவளியை தைபூர் எனவும் கரிபியன் பகுதியில் ஏற்படும் சூறாவழியை கரிக்கேன எனவும் அழைப்பர் இவ்வகை அயனச் சூறாவழி பெரும் சேதத்தை விளைவிக்கக் கூடியது. இச்சூறாவளியில் காற்றின்வேகம் மணிக்கு 75 மைலுக்கு மேலாக இருக்கும் போபோட் திட்டப்படி காற்றின் வேகம் 12க்கு மேற்பட்டு இருக்கும் மேற்குறிப்பிடப்பட்டநான்கு வகை சூறாவளிகளின் செல்வாக்குக்கே வங்காளதேசம் அடிக்கடி உட்பட்டு வருகின்றது. மூன்றும் நான்காம் வகை அயனச் சூறாவளிகள் தாக்கும் பொழுது பெரும அழிவுகள் ஏற்படுகின்றன.

இன்று சர்வதேச ரீதியில் வளி நிலையில் குறிப்பாகசூறாவளி நிகழ்வு எதிர்வு கூறலை பற்றிய விஞ்ஞானம் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

வானிலையில் செய்மதிகள் மூலம், முகில் கூட்டங்கள் வான அமுக்கங்களில் மாற்றங்கள் போன்றவற்றை அறிந்து சூறாவழி நிகழ்வுகள்பற்றி எதிர்வு கூறப்படுகின்றன. இத்தகைய வசதியிருக்கும் அரசாங்கங்கள் நிர்வாக யந்திரத்தையும், மக்களையும் இயற்கை அழிவுகளை எதிர் கொள்ளத் தயார் படுத்துவதைக் காணலாம் பல நாடுகளில் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகள் நன்கு விருத்தியாக்கப்பட்டு இருக்கின்றன. இந்தியாவிலும் கூட இத்துறை ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றதெனலாம்.

இந்நடவடிக்கைகள் மூலம் உயிர்சேதம், பொருட்சேதம் போன்றவறறை குறைக்கக் கூடியதாக இருக்கின்றது. வங்காளதேசம் மிகவும் வறுமையானவளர்முக நடாகவும் மக்கள்தொகை மிகுந்த நாடாக இருப்பதாலும் சூறாவளி, மற்றும் இயற்கை அழிவு சக்திகளின் தாக்கங்களைக் கட்டுப்படுத்தபோதிய நடவடிக்கை மேற்கொள்ள முடியாது இருக்கின்றது. வங்காள தேசம் வெள்ளப்பெருக்கு, சூறாவளி, கடல்நீர் உட்புகுதல், கடற் கொந்தளிப்பு போன்றவற்றினால் ஏற்படும் அழிவுகளைக்குறைக்க பல நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் அண்மைக்காலங்களில் இயற்கையினால் ஏற்படுத்தப்படும் அழிவுகள், அவைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுகள் சர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்று இருப்பதனைக்காணலாம். வங்காளதேசம் சர்வதேச நாடுகளின்

(7-ம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

## பிரிட்டன் - பிரிட்டானின் பண்பின்மை

இன்சொல் கூறுவதும் துன்பம்தரும் உண்மையைத் துன்பம் உண்டாக்காதவாறு செய்துவிடும் அதிசயசக்தியும் பிரிட்டிஷ் மக்களுக்குப் பொதுவான பண்பு.

'மதியாதார் முற்றம் மதித்தொருகாற்சென்று மிதியாமை கோடிபெறும்' என்பது தமிழ் மூதாட்டி எங்களுக்கு விட்டுச்சென்ற நிதியம்.

இவ்விரண்டுக்கும் முரண்பாடு ஏற்படும் வகையில் இலங்கையிலிருந்து உயிர்தப்ப லண்டனுக்கு வெளியேறும் இலங்கைத் தமிழ்மக்கள் கூட்டம் நடந்துகொள்கிறது.

அகதிகளுக்கு புகலிடம் அளிப்பதில் பிரிட்டன் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டியது பிரிட்டிஷ் அரசின் கடமை; அதுவும் இலங்கை மக்கள் - தமிழரோ சிங்களவரோ - என்றால் அது பிரிட்டிஷ் ஆட்சியின் பொறுப்பு.

இலங்கையில் எந்தப்பகுதியிலும் தமிழர் மட்டுமல்ல சிங்கள மக்களுமே பாதுகாப்பின்றி வாழ்வது இன்றைய அபாயநிலை குறிப்பாக அண்மையில் நடந்த சம்பவங்கள் உலகறிந்தவை.

இதனைச் சாட்டாகக்கொண்டு வெளியேறும் கூட்டத்தினரை இனங்கண்டு தடுத்து நிறுத்துவது நியாயமாகும். ஆனால் இலங்கைக்குத் திரும்பும் தமிழ் மக்கள் அகால மரணத்துக்குப் பலியாகாரென்று சொல்லும் நிலை இங்கு இன்னும் உருவாகவில்லை.

அது என்னவானாலும் உள்துறை அமைச்சர் திரு லியோன் பிரிட்டானின் தீவிரமானதடைச்சட்டம் பிரிட்டிஷ் பண்புக்கு புறம்பானது பொறுப்பற்றதும் கூட.

அன்று சுதந்திரத்தை ஒரு கூட்டத்தினருக்கு தாரை வார்த்துக் கொடுத்ததின் விளைவை இன்று பிரிட்டன் உணரவேண்டும்.

# வடக்கிலே பனையும் தெற்கிலே பலாவும்

**நா. மாணிக்க இடைக்காடர்**

**நான்** பள்ளிக்கூட மாணவனாகவிருந்த பொழுது வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அன்று நீதியரசர் அக்பர் பேசினார். மொழிபெயர்த்தவர் பிரபல வழக்கறிஞரும் இந்து சாதனத்தின் ஆங்கில வெளியீட்டின் ஆசிரியருமாகிய எம். எஸ். இளையதம்பி. யாழ்ப்பாணத்தில் இரு பொருள்களிருக்கும் வரையும் ஒரு குறைவுமில்லை யென்றார் நீதியரசர். அவர் குறிப்பிட்ட ஒரு பொருள் யோகசுவாமி; மற்றப்பொருள் பனை. யோகசுவாமி மறைந்தாலும் அவர் எங்களிடையே இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். பனைச்செல்வம் அழியாமலிருக்க நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

## சிறப்பறிந்த

## அரச அதிபர்

பனையின் சிறப்பை எங்களில் சிலருக்குத் தெரியாமல் இருந்தாலும் அக்காலத்து ஆங்கிலேய அரசாங்க அதிபர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். டைக் என்னும் அரசாங்க அதிபர் காலத்தில் மூன்று ஆங்கிலேயர், தேசாதிபதியிடமிருந்து ஒரு கடிதத்துடன் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வந்தார்களாம். கடிதத்தில், கப்பல் கட்டுவதற்குப் பனைமரம் தேவையென்று குறிப்பிட்டு மரங்களை வெட்டி, மரத்தைக் கொண்டுபோகவும் உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது. டைக் முடியாதென்று கூறி அவர்களைத் துரத்தி விட்டாராம். இதையறிந்த தேசாதிபதி அவரை அனுராதபுரத்திற்கு இடம் மாற்றினாராம். டைக்லண்டன் அதிகாரிகளுக்கு (Colonial Office) இதையிட்டு விண்ணப்பித்து வென்றதால் பிறகும் யாழ்ப்பாணத்திற்கு இடம்மாறி வந்ததாகக் கேள்விப்பட்டேன். பனையில் பல உபயோகங்களைத் தெரிந்த டைக் கூறினாராம், பனையில்லாவிட்டால் இக்குடாநாடு மீண்டும் மணற்றிடலாகி விடுமென்று- ஒரளவில் காற்றின் வேகத்தை அடக்குமென்ற அர்த்தம் (Wind Belt)

## இரு விருட்சங்கள்

நான் உணவு உற்பத்தி அதிபராகவிருந்தபொழுது ஒரு நாள் அதிகம் ஓடியாடித்திரிந்ததால் நித்திரைக்கு நேரத்திற்குச்சென்றிருந்தும் நித்திரை வரவில்லை நித்திரை வரும் வரையும் பயன்தரக் கூடிய ஏதாவது விடயமிருந்தால் யோசிக்கலாமென்றுணர்ந்து, அக்காலத்து அரிசி குறைபாட்டின் நெருக்கடியை எப்படி நிவர்த்தி செய்யலாமென்று சிந்திக்கலானேன். அரிசியோ ஒருசிறுதான்யம் ஆனல் பல இலட்சக்கணக்கான ஏக்கர் காணிவேண்டும், நீர் வேண்டும்; நேரத்திற்கு மழைவர வேண்டும்; ஐந்தாறு மாதம் பிரயாசை எடுக்கவேண்டும். ஆகையால் இவ்வளவு கஷ்டங்கள் இல்லாமல் உணவுப் பொருள் உண்டா வென்று ஆலோசித்தேன். ஏதாவது பெரிய உணவுப் பொருளாயிருக்கக் கூடியதும் அதிக பூமி தேவையில்லாததும் நீர் அதிகம் தேவையில்லாததும் வளர்ப்பதற்கு அதிகம் சிரமம் இல்லாததும் என்று பார்க்குமிடத்து பனையும் பலாவும் என்மனதில் உதித்தன. இதை மறுநாள் அமைச்சர் சேர். ஒலிவர் குணதிலகாவுக்குக் கூறினேன். அவரும் இதைப் பற்றிச்சில காலமாகயோசித்து வருவதாகக்கூறினார். தானும் இந்த இரு விருட்சங்களையும் நினைத்ததாகச் சொன்னார்.

இதன் விளைவாகப் பனை. பலா உற்பத்தியை ஊக்குவிக்கப் பல கருமங்களை மேற்கொண்டோம். அக்காலத்தில் பாணந்துறைப் பெரியார் டயஸ் பலா அபிவிருத்திக்குப் பல தொண்டுகள் செய்தார். அவர் தனது வாழ் நாள் முழுதும் இந்த அபிவிருத்தியில் ஈடுபட்டிருந்தார். இது அரசாங்கத்திற்கு மிகவும் உதவியது. ஆனல் அக்காலத்திலே வடக்கே இப்பணியில் திரு. கனகராசா அதிகம் ஈடுபடத் தொடங்கவில்லை. அக்காலத்தில் இவர் இப்பணியில் ஈடுபடத் தொடங்கியிருந்தால் நாங்கள் இப்பொழுது அரை வழி போயிருப்போம்.

வடக்கேயிருக்கும் எங்களுக்குச் சிலவேளை தெற்கே பலாவை உணவுக்கு எப்படிப் பயன் படுத்துகிறார்களென்று தெரியாமல் இருக்கலாம். நான் மேல்மாகாண அரசாங்க அதிபராயிருக்கும் பொழுது அவிசாவெல்லைக்குச் சமீபத்திலிருக்கும் ஒரு சிறு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். நேரம் மத்தியானமாகி விட்டது. வீட்டுக்கு வீடு முற்றத்திலே மதிய உணவு உண்டு கொண்டிருந்தார்கள். அதுபற்றி நான் வினவியதற்கு. ''இது தான் எங்கள் மத்தியான உணவு; பலாக்காயில் தயாரிக்கப் பட்டது'' என்றார்கள். பலாக்காயைப் பழுக்குமுன் பறித்து வெட்டிச சுளையை எடுத்து, அதனை விதையோடு நன்றாகத் தண்ணீரில் அவியவிட்டு, உப்பு. தேங்காய், மிளகாய், வெங்காயம் போட்டு சிறிதுநேரத்துக்குப் பிறகு கொதித்ததும் பானையை, இறக்கிப் பரிமாறுவார்கள். இப்பகுதியில் இது தான் மதிய உணவு. பலாக்கனியில் கறியும் தயாரிப்பார்கள். இது, மிகவும் பிஞ்சாயிருக்கும் காயை மரத்திலிருந்து பறித்துச் சாதாரண கறியாகச் சமைப்பார்கள். நான் உண்டு பார்த்திருக்கிறேன். மிகவும் திருப்திகரமான உணவு.

## தெற்கே பலா

## வடக்கே பனை

எவ்வளவு பலா தெற்கே பலனை உள்ளதோ அதற்கு இருமடங்கு பலனைப் பனை வடக்கே தருகிறது. நான் ஜப்பான் சென்றிருந்த பொழுது இந்தக் கற்பகவிருட்ஷத்தைப் பற்றி ஒரு விவசாய நிபுணருடன் உரையாடினேன் இறுதியில் அவர் இந்த விருட்சம் ஜப்பானில் இருக்குமாயின் காலையும் மாலையும் இந்த விருட்சத்திற்கு மூன் விழுந்து கும்பிடுவேனென்றார் எங்கள் முன்னோருக்குப் பனை எப்படிப் பலன் தந்ததோ அப்படித் தான் பாலைவன வாழ்க்கைக்கு ஒட்டகமும் இம் மிருகத்திற்குத் தீங்கிழைப்பவர்க்குச் சிறைத்தண்டனை கொடுப்பார்கள், இப்படி மனப்பான்மையுடன் பார்க்கும் பொழுது பனையை நாம் வணங்கவேண்டும். இதற்குத் தீமை செய்பவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டும்.

பனை மரங்கள் குறையாமல் இருப்பதற்கு ஒவ்வொரு ஆண்

(6-ம் பக்கம் பார்க்க)

# நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—13

# மக்கள் ஒற்றுமைப்பட்டால் போதும் என்ற 'செல்வா'

**எஸ். எம். ஜி.**

‘சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென்று குரலெழுப்பிய திரு. எஸ் டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகா தமது சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் இருபத்து நாலு மணி நேரத்தில் சிங்களத்தை அரியாசனத்திலேற்றுவதாக சிங்கள மக்களுக்குறுதியளித்துப் பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

பண்டாரநாயகாவுக்கு மொழிப்பிரச்னை காரணமாகச் செல்வாக்கு அதிகரித்து வருவதைக்கண்ட ஐக்கிய தேசியக்கட்சியினர் தாமும் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதற்கு முன்வந்து வாக்குறுதியளிக்கா விட்டால் தேர்தலில் வெற்றிபெற முடியாதென்று முடிவுசெய்தனர். இதனல் ஐக்கியதேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் 'சிங்களம் மட்டுமே' அரசகரும மொழியென்ற பிரேரணையைக் கொண்டுவருவதற்கு முடிவுசெய்யப்பட்டது.

ஐக்கியதேசியக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களாக இருந்ததமிழர்கள் தெரிவித்த ஆட்சேபம் எடுபடவில்லை.

## களனிமாநாட்டில்

## யு. என். பி. தீர்மானம்

1956ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆண்டு மாநாடு களனியில் கூடியது. இம்மாநாட்டில் பாணந்துறையைச் சேர்ந்த திரு. ஜயவீர அத்துக்கோரளை (? ) ''சிங்களம் மட்டுமே' அரசகரும மொழியாதல்வேண்டும் மென்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். இதை திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் அனுமதித்தார். பிரேரணை நிறைவேறியது. இதைத்தொடர்ந்து திரு. சு. நடேசபிள்ளை அமைச்சர்பதவியை ராஜினமாச்செய்ததுடன் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்தும் வெளியேறினார். வேறுபல தமிழர்களும் கட்சியிலிருந்து வெளியேறினர்.

திரு. பண்டாரநாயகா சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும் என்று கூறியதுடன் தமிழுக்கும் நியாயமான உரிமைவழங்கப்படும் என்று கூறி இதன்படியே தமதுகட்சியின் மாநாட்டில் தீர்மானமும் நிறைவேற்றி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உறுதியளித்திருந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி தமிழுக்கு உரிமை என்றபேச்சுக்கே இடம்வைக்கவில்லை!

## பண்டாவுடன்

## கூட்டுச்சேர்ந்தனர்

மொழிப்பிரச்னை மூலம் சுலபமாகஆட்சிக்கு வரவாய்ப்பிருக்கின்றதென்பதை உணர்ந்து கொண்ட லிப்பிலவகார சமசமாஜிக் கட்சியின் தலைவர் திரு பிலிப் குணவர்த்தன. பதவிபெற முனைவின் டபிள்யு தகநாயகா, கே. எம் பி. ராஜரத்தின, ஐ. எம் ஆர். ஏ ஈரியகொல ஆகியோர் பண்டாரநாயகாவுடன் சேர்ந்து மக்கள் ஐக்கியமுன்னணியை அமைத்தனர்

தமிழ்ப்பகுதிகளில் தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்காகத் தலைவர்கள் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமைப்பட வேண்டுமென்று பலர் குரல் எழுப்பினர். தமிழ்க்காங்கிரசும், தமிழ் அரசுக்கட்சியும் அடங்காததமிழர் முன்னணியும் ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டுமெனச் சிலர் முயற்சி செய்தனர். அது பயன்தரவில்லை.

## மக்கள் ஒற்றுமை

## போதும்

''தலைவர்கள் ஒற்றுமைப் படவேண்டிய அவசியமில்லை. மக்கள் ஒற்றுமைப்பட்டால் அவர்களின் தீர்ப்பை தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டி வரும் ''என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சொல்லிவிட்டார்.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மொழிப் பிரச்னையின் அடிப்படையில் நடைபெற்றதால் நாடுமுழுவதும் உணர்ச்சிக்கொந்தளிப்பு நிலவியது. தென்னிலங்கையில் சம அந்தஸ்துக்காக வாதாடிய இடதுசாரி இயக்கங்களான நவலங்கா சமசமாஜக் கட்சியினதும் இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியினதும் கூட்டங்களில் அடிதடியும் கல்வீச்சும் இடம் பெற்றன. கூட்டங்கள் குழப்பப்பட்டன. தமிழுக்காக முதலில் இரத்தம் சிந்தியவர்கள் இடதுசாரிகள் தான்.

தமிழ்ப்பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியோ மக்கள் ஐக்கிய முன்னணியோ வேட்பாளர்களை நிறுத்த முடியாத நிலை!

''சிங்களம் மட்டும் சட்டத்தை'' பாராளுமன்றத்திலுள்ளேயும் வெளியேயும் இறுதிவரை எதிர்த்துப் போராடுவோம் என்று திரு. செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியினரும் உறுதியளித்தனர் சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து பாராளுமன்றத்துக்கு முன்பாகச்சத்தியாக்கிரகம் செய்யப்போவதாகவும் தமிழரசுக்கட்சி அறிவித்தது.

தமிழ்நாட்டில் அப்போது சென்னை மாகாணத்தில் இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சிகளில் திராவிடமுன்னேற்றக்கழகம் ஈடுபட்டு வந்தகாலம். அண்ணாவின் தலைமையில் கழகம் அரசியல் கட்சியாக வளர்ந்து கொண்டிருந்த நிலை. கழகம் கடைப்பிடித்த உத்திகளையும் கோஷங்களையும் தமிழ் அரசுக் கட்சியும் சுலபமாகப்பற்றிக் கொண்டது.

## தமிழ் நாட்டுடன்

## அன்றைய தொடர்பு

போராட்டம் சிறைச்சாலைகளை நிரப்புவோம் என்பதெல்லாம் இலங்கை அரசியலில் புதியவை!

திராவிட முன்னேற்றக் கழகத்துடனும் தமிழ் நாட்டின் மற்றும் தலைவர்களுடனும் திரு. செல்வநாயகமும் தமிழ் அரசுக்கட்சியினரும் அன்று ஏற்படுத்திக்கொண்ட தொடர்புகளும் இலங்கையில் தமிழ் இனத்தின் நிலைபற்றி அன்று தொடக்கம் தமிழ் நாட்டில் கொடுத்துவந்த விளக்கமும் தான் இன்று அகதிகளாகச் சென்ற இலங்கைத் தமிழருக்குத் தமிழ்நாடு கைகொடுத்து உதவக்காரணமாக இருக்கிறது

1956 ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலில் தந்தை செல்வாவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களும் வடக்கிலும் கிழக்கிலும் அமோகவெற்றியீட்டினர்

யாழ்ப்பாணத் தொகுதியில் அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் வவுனியாவில் அடங்காத்தமிழன் திரு. ஸி. சுந்தரலிங்கமும் வெற்றியீட்டினர்.

தேர்தலில் வாக்களித்தபடி தேர்தல் முடிந்து ஆட்சி பீடத்துக்கு வந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி சிங்களம் மட்டும் மசோதாவைக் கொண்டு வருவதற்கும் அதில் நியாயமான அளவு தமிழ் உபயோகத்துக்கு வசதி செய்யவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தது இச்சமயத்தில் நியாயமான அளவு தமிழ் உபயோகத்துக்கு எம். ஈ பி குள்ளும் ஆதரவாளர் மத்தியிலும் ஆட்சேபம் கிளம்பி அதற்கு அடையாளமாக பாராளுமன்றப் படிக்கட்டின் கீழ் எப். ஆர். ஜயசூரியாவும் கே. எம். பி ராஜரத்தினவும் சாகும் வரை உண்ணவிரதமிருந்தனர் நியாயமான அளவு தமிழ் உபயோக யோசனை கைவிடப்பட்டது!

1956-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி சிங்களம்மட்டும் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இம்மசோதாவை எதிர்த்து தேர்தல் பிரசாரத்தின்போது வாக்களித்தபடி தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் தந்தை செல்வா தலைமையில் பாராளுமன்றத்துக்கு முனபாகக் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர்

சத்தியாகக்கிரகிகள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்று உதவி செய்ய வந்தவர்களுள் தந்தை செல்வாவின் இரு புதல்வர்களும் இருந்தனர். புதல்வர்கள் குண்டர்களால் நையப்புடைக்கப் பட்டபோது அவற்றை அமைதியுடன் பார்த்துக் கொண்டு தந்தை செல்வா புல் தரையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தார்.

(மிகுதி அடுத்த வாரம்)

---

1 வது நபர்:
ராஜி தியேட்டரில் என்ன நடக்குது?


2 வது நபர்:
இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் ஐம்பதாவது நாளாகத 'தில்லு முல்லு' நடக்குது

1 வது நபர்:
அதில்லையப்பா, என்ன படம் நடக்குதென்று கேட்டேன்,

2 வது நபர்;
அதைத்தான் சொல்கிறேன. 'தில்லு முல்லு' என்ற படம்தான்

மாதகல் கடம்பன்

# தொடர் நவீனம்




**10**

கந்தசாமி படுக்கையிற் போய் விழுந்தவன் தான், இரவு உணவுக்குக்கூட எழும்ப வில்லை.

தங்கம் பல தடவைகள் அவன் அருகே போயிருந்து உணவை உண்டுவிட்டுப்படுக்குமாறு நச்சரித்துப்பார்த்தாள். அவன் எதையுமே தன் செவியிற் போட்டுக்கொள்ளவில்லை. அவனைப்பார்க்கப்பார்க்க முன்னர் எப்போதும் இல்லாத ஆச்சரியமும், இன்னொரு புறத்தில் வேதனையும் அவள் மனத்தை உறுத்தித் துன்புறுத்தின.

வீட்டில் அன்று நடந்து முடிந்த சம்பவத்தை அறிந்தும் அவன் ஒன்றுமிறியாத அப்பாவிபோல இருந்துவிடக்கூடிய இயல்புள்ளவன் அல்லன் என்பது அவளுக்குத் தெரியும். ஆறுமுகம் அங்கு வந்த பிறகாவது அவன் தன் மனக்கொதிப்பை அவரிடம் சொல்லி மனம் மாறுவானென்று அவள் எதிர்பார்த்தாள். அப்படி அவரோடு அவன் பேசப்போய் விபரீதங்கள் ஏதும் வந்து சேர்ந்து விடுமோ என்றும் அவள் எண்ணிப் பயந்து கொண்டே இருந்தாள்.

இப்போது அவன் கையாலாகாதவன் போல இப்படிக் குப்புறப்படுத்துக் கிடப்பதைக் காணும் போது ஆறுமுகத்துடன் நேருக்குநேர் பேசிஅதனல் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டாற்கூடப் பரவாயில்லை என்றே அவள் மனத்துக்குத் தோன்றுகிறது.

அவனுக்கு இயல்பாகவுள்ள தார்மீக ஆவேசங்களெல்லாம் உள்ளடங்கி அவனைக் கோழையாக்கி விட்டதாக அவள் எண்ணிக்கொள்ளவில்லை. அவனுடைய இந்த மௌனம் அவன் உள்ளத்தின் வைரமான உறுதி என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

தங்களுக்கொன்று சொந்தமான ஒரு வீடில்லாததால் தன் கணவனும் அவமானத்துக்குள்ளாகி அநாதைகள் போலச் செயலற்றுப் போய் இருப்பதை அவள் எண்ணி எண்ணிமனம்புழுங்கி இரவெல்லாம் கண்ணீர் வடித்தாள்.

ஆறுமுகம் வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு அங்கு நடந்து முடிந்த இந்த மானக்கேடான சம்பவங்களை அறிந்து தன் மனைவியையும் மாமியையும் சிலசமயம் கண்டித்து வைக்கக்கூடுமென்றும் அவள் எதிர்பார்த்தாள். அவளுடைய அந்த எதிர்பார்ப்பு வெறும் ஏமாற்றமாகவே முடிந்தது. அந்த வீட்டில் விரும்பத்தகாத சம்பவமொன்று நடந்திருக்கிறதென்பதைத் தான் அறிந்து கொண்டதாகவே அவன் காட்டிக் கொள்ளவில்லை. அவன் சுபாவம் அதுதான். தனக்குள்ளேயே எல்லாவற்றையும் புதைத்துவிட்டு யாரோடும் முரண்படாது பட்டும் படாமல் வாழ்ந்துவிட வேண்டும் என்னும் மனப்போக்குள்ளவன் அவன் இளைய தனது சகோதரி மீனாட்சியின் பொருட்டாவது தன் வாயைத் திறக்கக் கூடுமென்று அவளுக்கொரு அற்ப நம்பிக்கை அந்த நம்பிக்கையையும் ஆறுமுகம் பொய்யாக்கிய பிறகு...

கந்தசாமி என்ன தீர்மானத்துடன் இப்படி மௌனமாகப் படுத்துக் கிடக்கிறுன் என்பது அவளுக்குப் புரியவில்லை.

அவன் அங்கு நடந்த சம்பவத்தைத் தன் கண்களால் நேருக்கு நேரே கண்டவன். அப்போதே பாயை எடுத்துப் போட்டுக்கொண்டு அதிற் படுத்தவன் தான். ஒரு வார்த்தைதானும்வாய்திறந்து அவளோடு கூட அவன் பேசவில்லை. எவர் முகத்தையும் அவன் ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை.

அவனைப் போலவே அந்தக் குடும்பத்தில் அன்று எல்லோரும் பட்டினிதான்.

அவன் படுக்கையில் விழுந்து கிடந்தாலும் உள்ளம் உறங்காது குமுறிக் கொண்டிருக்கும் போது விழிகளை மாத்திரம் உறக்கம் வந்து எப்படித் தழுவிக்கொள்ளும்?

அந்தக்கிராமத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்து நாய்களின் குரைப்பு வீட்டுக்குப் பின்புறமுள்ள வேலிப்பூவரசிற் படுத்துறங்கும் கோழிகளின் குறுகுறுப்பு. பூனைகளின் வாஞ்சையோடுகூடிய உறுமல், சில்லிடுவானின் இராக ஆலாபனம், பல்லியின் பொருளறியாச் செய்திகள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறவர்களின் குறட்டை ஒலிகள் எல்லாமே அவன் செவிகளில் சுவாதீனமாக வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. ஆனல் அவன் ஆவலுடன் நீண்ட நேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அந்தக்குரல்...

அவன் நெடுமூச்செறிந்த வண்ணம் படுக்கையிற்புரண்டு புரண்டு மனம் சோர்ந்து கிடக்கிறுன்

திடீரென்று அந்தக்குரல் அவன் படுத்துக்கிடக்கும் குடிசைக்குப் பின்புறத்தில் நிற்கும் பூவரசிலிருந்து எழுகிறது. அதைத் தொடர்ந்து ஒரு விளக்கில் பல தீபங்கள் ஏற்றப்பட்டுச் சுடர்விடுவது போல பலகுரல்கள் ஆங்காங்கே எழுகின்றன.

சேவல்கள் கூவுகின்றன.

வார்ச்சுருட்டிக்கொண்டு கந்தசாமி படுக்கையைவிட்டு எழுந்தான்.

குடிசையை விட்டுவெளியே வந்து, சிறிது நேரத்தின் பின் மீண்டும் குடிசைக்குள் நுழைந்து உடையை மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

அவன் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே செல்வதையும், திரும்பி வந்து எங்கோ போவதற்குப் புறப்படுவதையும் அவதானித்துக்கொண்டு கிடந்த தங்கம், அவனிடம் அப்போது போகுமிடத்தை விசாரிக்ககூடாதென்று எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்து விட்டாள்.

கந்தசாமி சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

உள்ளூர்ப் பாதைகளுக்கூடாக மேடுபள்ளங்களையும் மணற்கும்பிகளையும் தாண்டி, நான்குகிலோமீற்றர் தூரம் வந்து கெருடாவில் வேலாயுதம்வீட்டை அடைந்தபோது வானம் நன்ருக வெளுத்துவிட்டது

விடிந்தும் விடியாத அந்த அதிகாலை வேளையில் கந்தசாமி அங்கு வந்து நிற்பதைக்கண்டதும் வேலாயுதம் அதிசயித்துப் போனுன். கந்தசாமியை வரவேற்கும் போது அவன் மனத்திலெழுந்த அதிசயம் அவனை அறியாமல் வார்த்தைகளாக வெளிப்பட்டது.

"வாமச்சான்! என்ன விடியவெள்ளண?"

"வரவேண்டி இருந்தால் வரத்தானே வேணும்"

"சரி...சரி..." என்று சொல்லிக்கொண்டு ஒரு பாயை எடுத்துத்திண்ணையில் விரித்து விட்டான் வேலாயுதம்.

வேலாயுதத்தின் மனைவி அதற்கிடையில் எழுந்து தேநீர் தயாரித்து இருவருக்கும் பரிமாறினுள்

தேநீரைப் பருகிமுடிந்ததும் இருவரும் வெற்றிலையை எடுத்துப் போட்டுக்கொண்டனர்.

கந்தசாமியும் வேலாயுதமும் நீண்டகால நண்பர்கள். கூலிப்பிழைப்புக்காக இருவரும் தோட்டங்களுக்குச் சென்ற சமயங்களிற் கண்டு பழகி, காலப்போக்கில் மிக நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள். எப்போதாவது சில சமயங்களிற் கந்தசாமி வேலாயுதத்தைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்கு வருவதுண்டு.

அதேபோல வேலாயுதமும் கந்தசாமியைத் தேடிச்செல்வதுண்டு

இன்று விடிந்தும் விடியாத இந்த நேரத்திற் கந்தசாமி அங்கு வந்திருக்கிறுன் அவன் முகத்திற் சோர்வும் வேதனையும் குடிகொண்டிருக்கிறது. அவன் ஏதோவொரு மனச் சங்கடத்துடன் இன்று வந்திருக்கிறுன் என்று வேலாயுதம் தன் மனத்தில் தீர்மானித்துக் கொண்டான். எதுவாக இருந்தாலும் கந்தசாமி தானுகவே சொல்லட்டுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த வேலாயுதம், அவன் முகம் வாடி மௌனமாக வானத்தை வெறித்துப்பார்த்துக் குழம்பிக்கொண்டிருப்பது கண்டு தானே வாய்திறந்தான்.

"என்ன மச்சான் யோசிக்கிறுய்?"

"இ...ல்...லை" என்று இழுத்தான் கந்தசாமி.

"என்ன இல்லையெண்ணுறுய்! என்ன எண்டாலும் யோசிக்காமல் சொல்லு!" என்று அவன் மனத்துக்கு நம்பிக்கை ஊட்டினுன் வேலாயுதம்.

கந்தசாமி மனம்பொருமிப் பெருமூச்செறிந்து கொண்டு, "எனக்கு இருக்கிறதுக்கு இடம் வேணும் மசச்சான்" என்றுன், மெல்ல அடித் தொண்டையால்

"அட, இதுதானே! வா இஞ்சைவந்து என்னோடை இரு"

"இல்லை மச்சான்..." கந்தசாமி தயங்கினுன்.

"அது விருப்பமில்லை எண்டால் இஞ்சினை வந்து ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு இரன்"

"எங்கைஇருக்கிறது? இடம் வேணும்!"

"என்னப்பா இடமெண்ணுறுய்! இஞ்சைதானே நிலங்கிடக்குது என்ரை வீட்டுக்குப்பக்கத்திலை நீயும் ஒரு வீட்டைக்கட்டிக்கொண்டு இருக்கிறது தான்!"

"மச்சான் வேலாயுதம், நீ நிலச்சொந்தக்காரன் மாதிரியெல்லே கதைக்கிறுய்!"

"மச்சான் இஞ்சை ஆருக்கடாப்பா குடியிருக்கிற நிலம் சொந்தம்! இருபத்திமூண்டு குடும்பம் இருக்கிறம்; நீயும் வந்து இருபத்திநாலாவதாகக் குடியேறவேண்டியது தான்."

"நிலச்சொந்தக்காறன் புதிதாக வந்து குடியேறுகிறதுக்கு விடுகிறுரோ, என்னவோ!"

"அதைப்பற்றி நீ கவலைப்படாதை! அதை நான் பார்த்துக்கொள்ளுறன் வா இப்பவே போய்க் கதைச்சுக்கொண்டு வருவம்."

இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான நிலங்களெல்லாம் திருச்சிற்றம்பலத்தார் குடும்பத்துக்குப் பரம்பரையாக வந்த சொத்துக்கள். அவருடைய முன்னேர்கள் ஒருகாலத்தில் அந்தப் பகுதியின் முடிசூடா மன்னர்களாக இருந்து ஆண்டு அனுபவித்தவர்கள். திருச்சிற்றம்பலத்தார் குடும்பம் அக்காலத்தில் இருந்தது போன்ற பழைய நிலையில் இன்று இல்லாத போதிலும், அவர்களுக்குச் சொந்தமான நிலபுலன்களை ஒவ்வொன்ருக விற்ருலும் இன்னும் பத்துத் தலைமுறைக்கு அசைவில்லாது அவர்களால் வாழ்வதற்கு முடியும்.

அவர் மறுக்காமற் சம்மதிப்பார் என்ற நம்பிக்கை வேலாயுதம் மனத்தில் இருந்தது.

இருவரும் திருச்சிற்றம்பலத்தார் வீட்டுக் 'கேற்' றைத் திறந்து கொண்டு, புராதன சின்னமாகத் தோன்றும் அந்தப் பழைய வீட்டுமுற்றத்துக்கு வந்தனர்.

வேலாயுதம் முற்றத்தில் நின்று கொண்டு உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

"ஐயா......ஐயா!"

அவனுடைய குரலைத் தொடர்ந்து, "ஆரது?" என்று கேட்டுக் கொண்டு, திருச்சிற்றம்பலத்தார் வீட்டுவாசலுக்கு வந்தார்.

"எட வேலாயுதம்! என்னடா மோனை வெள்ளணக் காலமை இந்தப்பக்கம்?"

"ஐயாவிட்டைத் தான் வந்தனுங்கள்"

"ஆரிந்தப் பொடியன்? புது ஆளாக்கிடக்கு!"

"இவர் கரணவாயில இருக்கிறவர். என்ரை சிநேகிதன்;

"கந்தசாமி"

"என்ன விஷயம், இரண்டு பேருமாக வந்திருக்கிறியள்!"

"இவர் குடியிருக்கிறதுக்கு இடமில்லாது அந்தரிக்கிறுர், ஐயா! அதுதான் என்ரை வீட்டுக்குப் பக்கத்திலை ஒரு வீடு கட்டிக் கொண்டிருக்கிறதுக்கு விரும்புகிறுர் அது தான் நாங்கள் ஐயா விட்டை...!"

"அப்பிடியோ......! என்று கேட்டுக் கொண்டு, கந்தசாமியை அவர் தலையிலிருந்து கால்வரை ஏற இறங்கப் பார்த்தார். சிறிது நேரம் எதையோ மௌனமாக யோசித்த பின்னர், "சரி, பொடியன் நல்லவன் போலை கிடக்கு. நீங்களெல்லாம் என்ரை பிள்ளை குட்டியளடா மோனை! உங்களுக்கு உதவி செய்யாமல் நான் வேறை ஆருக்குச் செய்யிறது சரி. ஒரு கரைச்சலில்லாமல் இருக்கவேணும் எனக்கும் தேவைப்பட்ட நேரத்திலை தொண்டு துரவுகள் செய்ய வேணும் சரியோ...!" என்ருர் குறிப்பாக கந்தசாமியைப் பார்த்து.

கந்தசாமி சரியென்று தலையசைத்தான்.

"சரி. அப்பபோய், ஒரு கொட்டிலைக் கிட்டிலைப் போட்டுக் கொண்டு இருங்கோ"! —சொல்லிக் கொண்டு

[6-ம் பக்கம் பார்க்க]

## உங்கள் வீட்டுக்கு அத்திபாரமிட....

புதிய மனைகளை அமைப்பவர்கள், கிருகப்பிரவேசங்களுக்கு நாள் நட்சத்திரம், மாதம் பார்ப்பதுண்டு. வீடு கட்டும் போது அத்திபாரம் வெட்டும் நாள இல்லங்களின் யோகத்தை நன்கு காட்டும்.

சித்திரையில் வீடுகட்டினுல் பொருளழிவு; வைகாசியில் வெற்றி; ஆனியில் சத்துரு பயம்; ஆடியில் கால்நடைக் கஷ்டம்; ஆவணியில் இனசன உறவு; புரட்டாதியில் வியாதி; ஐப்பசியில் கலகம்; கார்த்திகையில இலட்சுமிவாசம்; மார்கழியில பயம்; தையில் அக்னி பயம்; மாசியில் பாக்கியம்; பங்குனியில் பொன் பொருள் விருத்தி

தை மாதத்தில் அத்திபாரம் இட்ட கட்டிடங்கள் பல இன்று தீயினுல்நாசமாகி வருகின்றன.

நன்றி: ஜே. ஸ்யர்.

## வடக்கிலே பனை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டும் புதுக்கன்றுகள் உற்பத்தி செய்து மர எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே போக வேண்டும். யாரும் ஒருவர் ஒரு பனை மரத்தை வெட்ட யோசித்தால் இதற்கு உரிமை உண்டா என்ற கேள்வியைத் தன்னைத்தானே கேட்க வேண்டும். இந்த மரத்தை இவர் உற்பத்தி செய்தாரா? இல்லா விட்டால் இவருக்கு என்னென்று உரிமையுண்டு! ஏற்கனவே மரங்களை உற்பத்தி செய்திருந்தால் வெட்டுவதற்கு உரிமையுண்டு. அதுவும் எத்தனை மரங்களை உற்பத்தி செய்தாரோ அத்தனை மரத்திற்குத் தான் உரிமையுண்டு.

விவேகிளாகிய எங்கள் மக்கள் ஒரு நல்ல எண்ணத்தைச் சொல்லிக் கொடுத்தால் கையாள்வார்கள். இந்தஇடத்திலே நான் கேட்டுக்கொள்வது காணியுள்ள ஒவ்வொருவரும் வருடாவருடம் பனைமர எண்ணிக்கையைக் கூட்டுவதற்குத் திட்டவட்டமாகச் செயல் ஆற்றவேண்டும் என்பதே. இப்பொழுது இருக்கும் மரத்தொகையைப் பன்மடங்காக அதிகரிக்கவேண்டும். அப்பொழுதுதான் இலாபகரமான பனம் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியும். நான் அமெரிக்காவிலிருந்த பொழுது எங்கள் பனை ஓலைப்பெட்டிகளைச் சிலருக்குக்காட்டினேன் பார்த்து ஆசைப்பட்டார்கள். சந்தைப்படுத்தலாமா மென்று ஒரு பிரபல வியாபாரியிடம் கேட்டபொழுது பத்தாயிரத்திற்குக்கூட அனுப்பினால் தான் தங்களால் இதைக்கையாள முடியுமென்றார். இப்படிப்பட்ட முயற்சியைச் செய்வதற்குமுன்பாகப் பனைமரத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

பனையின் பல பலன்களைப் பற்றிநாம் நன்கு அறிவோம். இங்கே கூறத்தேவையில்லை. உணவுக்கு அதுவும் இந்த நெருக்கடி காலத்தில் பனை மிகவும் உதவியானது. ஓலை, மரம், நார் போன்றவற்றிலிருந்து பல நன்மைகளை அடைகிறோம். மனிதனின் மூன்று முக்கிய தேவைகளில் (உணவு, உடை, உறைவிடம்) இரண்டு தேவைகளுக்குப்பனை கைகொடுக்கிறது சுருங்கக்கூறின் இது ஒரு கற்பகதரு. குடாநாட்டில் மட்டுமல்ல, வன்னிப்பகுதிகளிலும் பனை பயன் படுத்தப்பட்டது என்பதற்குச்சான்றாக பனங்காமம், பனைநின்றான். என்ற கிராமப் பெயர்கள் ஞாபகப்படுத்துகின்றன.

கைதடியில்

### பனை ஆராய்ச்சி

எந்தப் பொருளும், கருமமும் முன்னேறுவ தென்றால் விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி தேவை. இதற்கமைய கைதடியில் பனை ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவப்படும் என்ற செய்தி வரவேற்கத் தக்கது. நிலையம் நிறுவியதும் கொண்டு நடத்துவதற்கு நல்ல நிர்வாகிகளும் ஆராய்ச்சிக்கு நல்ல விஞ்ஞானிகளும் தேவை. தனிச் சம்பளத்திற்கு மட்டும் கடமையாற்றுவோர் இன்றைய சூழ்நிலையில் போதாது. இந்த நிலையம் ஒருகோவில் என்று நினைத்துத் தங்கள் முழு மனத்தையும் நேரத்தையும் அர்ப்பணிக்க வேண்டும். இவ்வேளை சிங்கப்பூர்ப்பிரதமர் அடிக்கடி கூறுவது என் ஞாபகத்திற்கு வருகிறது. மூன்றும் மண்டல நாடுகளில் ஆராய்ச்சி நிலையங்கள் ஏட்டு சுரைக்காய் போல் இயங்கப்படாது- உற்பத்தியாளருக்குப் பலன் தரக் கூடிய ஆராய்ச்சிகளிலேயே விஞ்ஞானிகள் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டு மென்பார் அவர். இது ஒருநல்ல புத்திமதி என்று நான் கருதுகிறேன். இந்த நிலையம் நிறுவியதும் கடமையாற்றுவோர் இக் கருத்தை மனத்தில் நிறுத்திக் கொள்ளட்டும்.

## பழைய வாழ்க்கைமுறை

தமிழர் கண்டபழைய வாழ்க்கைமுறை சிக்கனத்துடன், இயற்கையோடு இணைந்ததுமாகும். பிறந்தநாள் தொடக்கம் இறக்கும்வரை இயற்கை மனிதவாழ்வுக்கு இன்றியமையாது உறுதுணையாயிருந்தது. பிள்ளைகளுக்குப் பால் பருக்குவதற்குப் பக்குவமாகப்பயன் தந்த சங்கு, கிழவனுருக்கும் பால் பருக்குவதற்குப் பயன்தந்தது. சுரண்டி இடையில் வந்தது. பனை ஓலைத்தடுக்கு பிள்ளையை வளர்த்துவதற்குப் பக்குவமானது. றப்பர் சீற் உடம்புக்குப் பொருத்தமில்லாதது. பனையோலை விசிறியிற் பட்டு வரும் காற்றில் ஏதோ ஒன்றிருக்கிறது. வாழையிலையில் சோறுண்ணும்போது இலையிலிருந்து ஒரு சத்து உணவில் கலக்கிறது. கொதித்து ஆறிய நீரில் கழுவிய வில்வத்தளிர் அல்லது துளசி இரவிரவாக ஊறினால் அந்த நீர் மறுநாள் பருகுவதற்கு ஔடதம்போல் பயன்செய்கிறது. கைப்புச் சுவைக்கு வேம்பும் பாகலும் காற்றோட்டிக்காயும் எங்கிருந்தோ வந்து பருவகாலம் தவறாமல் பயன்செய்கின்றன பாகலின் அருமையை மேற்குத்தேய வைத்தியர்கள் படிப்படியாக அறிந்துவிட்டார்கள். பாகற்காய் வற்றலும், காற்றோட்டிக்காய் வற்றலும், வேப்பம்பூ வடகமும் தகரங்களில் அடைக்கப்பெறும் காலம் மலரப்போகிறது. காய்ந்துலர்ந்த வேப்பம்பூவும் இலுப்பைப்பூவும் என்றும் பயன்தரக் கூடியவை- நெல்லிக்காய், அப்பிள்பழம், திராட்சைப்பழம், பேரீந்து இவற்றுள் எல்லோருக்கும் ஏழைகளுக்கும் எளிதிற்கிடைக்கக்கூடியது எது? பலவித உயிர்ச்சத்துக்கள், ஊட்டச் சத்துகள், நிறைந்தது எது? வீட்டுவளவுகளில் எல்லோரும் உண்டாக்கி அதிக பயன் பெறக்கூடிய தன்னிறைவைத் தரக்கூடியது எது? அதை நாம் இலகுவில் பயன்செய்து கொள்வதற்கு பயிர்செய்து கொள்ளலாம் தானே?

நன்றி: மில்க்வைற்செய்தி

## தொடர் நவீனம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உள்ளே போகத் திரும்பினார்.

"அப்ப... நாங்கள் வாறம் ஐயா"—அவரிடம்விடைபெற்றுக் கொண்டு இருவரும் புறப்பட்டார்கள்.

வேலாயுதம்தாங்கள் சென்ற காரியம் கைகூடிவிட்ட மகிழ்ச்சியிற் துள்ளிக் குதித்துக் கொண்டே வந்தான்.

ஆனால் கந்தசாமி தான் குடியிருப்பதற்கு நிலம் கிடைத்துவிட்டதென்ற ஆறுதல் மனத்துக்கு உண்டான போதும், அவன் உள்ளம் குழறிக் கொண்டுதான் இருந்தான்.

(வளரும்)

அதோடு பொது மக்களும் உதவி, ஒத்தாசை, பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். காட்டுப்பகுதிகளில் ஒரு ஆனைக் கூட்டத்தில் தந்த முள்ள குட்டி பிறந்தால் எல்லாப் பெண் யானைகளும் சந்தோஷத்தால் இக் குட்டிக்குப் பால் கொடுக்குமாம்என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அதேபோலப் பனையில் சம்பந்தப் படாதவர்களும் பெண் யானைகளைப் போல் பிறக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும்.

பனையை வளர்ப்போம், பனையைப் பாது காப்போம், பனையின் பலனை அனுபவிப்போம்.

## எமது சிறுகதை

சுவரில் தொங்கும் கண்ணாடியில் சாரதா தன்னைப்பார்க்கிறாள். நெற்றியில் குங்குமமில்லை. தலையில் பூ இல்லை. முகமே வெறிச்சோடிப்போய்க் கிடந்தது.

அடிவயிற்றில் இருந்து நெஞ்சை எரித்தபடி ஓர் பெருமூச்சு.

விழிகளில் ஏக்கப். வாழ்க்கையில் ஏமாற்றம்.

அவளது திருமண] வாழ்க்கையின் ஆரம்பநிலையே ஏமாற்றம்; முற்றுப்புள்ளி பெற்றகாவியம்.

சாரதாவுக்குப் பெரியோர்களாலேயே பேசிச் செய்து வைத்த திருமணம். ஜாதகம் பார்த்து நாள் பார்த்து நேரம் பார்த்து செய்த திருமணம் தான். ஆனால் அவள் வாழ்ந்தது ஏழுமாதந்தான். எட்டாவது மாதமே எமன் அவளது வாழ்க்கைப் பாதையை அடைத்துவிட்டான் இந்தச் சமுதாயம் அவளுக்கு விதவை என்ற பட்டத்தை வழங்கும் படி செய்துவிட்டு அவள் புருஷனை எமன் அழைத்துச் சென்று விட்டான்.

பேசும் கதையும் உலாவி வந்தது.

இத்தனைக்கும் மத்தியில் கந்தசாமியின் இறுதிச்சடங்குகள் நிறைவேறின.


எட்டுச்செலவு அந்தியேட்டி என்ற ஓசிச்சோறு கிடைக்கும் மட்டும் நெருங்கியிருந்த அவளது உறவுகள் இப்போ அவளை நினைத்துக்கூடப்பார்ப்பதில்லை.

தாய் என்ற செடிதான் அவளுக்கு நிழலளித்தது. அந்த நிழலிலே சாரதா தங்கிக் கொண்டாள்.

காலங்கள் ஓடின. வருடங்கள் மாறின. கணவன் இறந்து முதலாவது ஆண்டு நினைவு நாளும் முடிந்துவிட்டது. அத்தோடு அவளிடம் இருந்த பணமும்முடிந்து விட்டது.

கணவன் தனிப்பட்ட ஒரு முதலாளியின் தொழிற்சாலையில்வேலைசெய்தபடியால் ஒப்பூதியம் இல்லை.

பொட்டைவிடலாம், பூவை விடலாம் சாப்பிடாமல் விட்டு விடமுடியுமா? எத்தனை நாளைக்குத்தான் உணவை ஒளிக்கமுடியும்? பசி, பட்டினி



# சாரதா

இ. பாலகுமார்

"புருஷன் கந்தசாமி பஸ்ஸில் அடிபட்டு இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் சாரதா பட்ட வேதனை சொல்லில் அடங்குமா?

தலைவிரி கோலமாக கண்களில் நீர் ஊற்றாய் அவள் நின்று அழுத அழுகை அந்த ஊரையே அழவைத்தது. கல் நெஞ்சம் படைத்த மனிதர்களே உருகி அழும்படி செய்தது? அவள் ஒப்பாரிகள்.

"ஐயோ! இந்த இளம்வயதிலேயே புருஷனைப் பறிகொடுத்திட்டாளே" என்று இரக்கப் பட்டவர்களும், "இன்னும் கொஞ்சம் காலம் இருந்திருந்தான் என்றால் ஒரு பிள்ளை குட்டியென்றாலும் தொங்கியிருக்கும். இப்ப இடைநடுவில் அனாதரவாக்கிப் போட்டுப் போட்டானே" என்று கவலைப்பட்டவர்களும் ஏராளம்

வயதுபோன கிழட்டுப் பெண்கள் சிலர் "என்ன பெட்டைக்கு இருபத்தெட்டுத் தானே வயது. நினைச்சால் இன்னொரு கலியாணம் செய்யலாம்தானே" என்று பிணம் போகும் முன் அவளுக்கு மணம்

என்றவயிற்றுக் கொடுமையை விரட்ட இப்போ அவளுக்கொரு வேலை தேவைப்பட்டது தன்வயிற்றோடு சேர்ந்து தாய் வயிற்றையும் காயவைக்கவிரும்பாத சாரதா புறப்பட்டாள் வேலைதேடி.

"முழுவியளத்துக் குதவாதவளுக்கு ஒரு வேலை தேவைப் படுகுது. வேலைதேட வெளிக்கிட்டாவோ, வேறென்னதேட வெளிக்கிட்டாவோ? உவளுக்கார்வேலை கொடுக்கிறது" என்று எதிர்வீட்டுச் செல்லம்மா புறுபுறுக்கத்தொடங்கினாள்.

செல்லம்மாவுக்குக் கண்ணுக்குள் தான்குத்தியது. சாரதாவுக்கு நெஞ்சுக்குள் குத்தியது.

அறுபதுவயது வரை தான் புருஷனுக்குப் பக்கத்தில் இருக்கிற இறுமாப்புத்தான் அவளை அவ்வளவுதூரம் பேசவைத்தது என்று சாரதா புழுங்கிக் கொண்டாள்.

பொங்கிவந்த வேதனைகளை நெஞ்சுக்குள்ளேயே அடக்கிக் கொண்டு சாரதாநடந்தாள். எதிரில் செல்லம்மாவின் மகன் ராஜன்.

"சாரதாக்கா, அம்மா அறியாமல் ஏதோ சொல்லிப் போட்டா அவவுக்காண்டி உங்களிட்டை நான் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுறன்"

"இல்லை ராஜன், எனக்கு யார் மேலும் எந்தக்கோபமுமே இல்லை. நான் விதைவையாகினது ஆண்டவனால் எனக்குக் கிடைத்ததண்டனை. அதைநான் அனுபவிக்கத் தானேவேணும்" என்றபோது சாரதாவின் முகத்தில் சோகத்தின் நிழல்படர்ந்திருந்தது.

"இல்லை சாரதாக்கா, தப்புப் பண்ணினவர்களைத்தான் ஆண்டவன் தண்டிக்கவேண்டும். எந்தத்தப்புமே செய்யாத உங்களை எதற்காக ஆண்டவன் தண்டிக்கவேண்டும்" என்றபோது சாரதா திடுக்குற்றே போனாள். எதற்காக இவன் இப்படியெல்லாம்பேசுகிறான் என்று மனதுக்குள் எண்ணியபடி "முற்பிறப்பில் செய்த தப்பாயும் இருக்கலாம்" என்றபதிலை வழங்கிவிட்டு, நடக்கலானாள்.

"நில்லுங்க சாரதாக்கா" -ராஜன் சாரதாவை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"இந்த வயதிலிருந்து இத்தக்கொடுமையை உங்களால அனுபவிக்க முடியாது. ஆனபடியால்......" என்று வாயை திறந்தவன் என்னசொல்லப் போகிறான் என்று ஓரளவுக்கு சாரதா உணர்ந்தபடியால், தான் முந்தி விழுந்து "எனக்கொரு வேலை தேவை. உன்னை நான் என்ரை கூடப்பிறந்த தம்பியாய் நினைச்சுக் கேட்கிறன். எனக்கொரு வேலைதேடித்தா" என்றபோது. ராஜனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. "உங்களுக்கு ஒரு மறுவாழ்வு தேவை, அதை நான் தருகிறேன்" என்று சொல்ல நினைத்தவனுக்கு தம்பி என்ற வாய்ப் பூட்டைப் போட்டு அடைத்து விட்டாள் சாரதா.

"தம்பி ராஜன், நீ என்னிலும் இருந்து ஒரு வயதுக்குத்தான் இளமை. ஆனபடியால் நான் என்னுடைய மனம் திறந்து சொல்லுறன் கேள். ஒரு பெண்ணுக்கு ஒருக்காத்தான் வாழ்வு கிடைக்கிறது. ஒருத்திக்குப் புருஷன் சர்கும்போது அவள் உணர்ச்சிகளும் செத்துப் போகும். இனி ஒருபோதும் நான் வேறை எவருடைய நினைவும் நெஞ்சில நிறுத்த மாட்டன். அவர் செத்தன்டைக்கே, என்ரை உணர்ச்சியும் செத்துப்போச்சு இப்ப நான் வயித்துப் பசிக்காக ஏதாவது வேலை தேடப் போறன். என்ரை பசியையும், அம்மாவின்ரை பசியையும் போக்க வேண்டும். உன்னாலை முடிஞ்சால் எனக்கொரு வேலை தேடித்தா" என்ற போது ராஜனின் கண்ணில் கண்ணீர் முட்டி நிறைந்திருந்தது

"பூச்சேலை கட்டிக்கொண்டு ஆலைபார்க்க வெளிக்கிட்டாள்" என்று ராஜனின் அம்மா அடிக்கடி திட்டுவாளே அது எந்த அளவு தப்பு என்பதை ராஜனால் இப்போது நன்றாக உணரமுடிந்தது.

'மனத்தை அழுக்காக்கி ஊருக்குக்காட்ட வெள்ளைச் சேலை கட்டுற பெண்கள் மத்தியில் எந்த அழுக்கு மில்லாத வெள்ளை நெஞ்சம் படைத்த சாரதாக்கா பூச்சேலை கட்டுறதில தப்பில்லை' என்பதை இப்போது அவனால் உணரமுடிந்தது.

"அக்கா நீங்கள் வீட்டை போங்கோ உங்களுக்கு வேலை நான்தாறன் நாளைக்குத்தொடக்கம்என்னுடைய கடையில்நீங்கள் தான் காசாளர்," என்றான் ராஜன்.

சாரதாவின் மனதில் ஒரு புதுத்தெம்பு.

"முழுவியளத்திற்கு உதவாதவள். உவளுக்கு யார் வேலை குடுக்கிறது." என்று கூறியவளுடைய மகனுடைய கடையிலேயே அதுவும் முழுவியளத்துக்கு முன்னுக்கு நின்று வேலை பார்க்கப் போவது விதவை சாரதா!

(யாவும் கற்பனை)

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
RISKY BUSINESS
மர்மம், திகில், விறுவிறுப்பு, ஆவேசம் கலந்த ஓவியம்

**லதா மினி**
(கோண்டாவில்)
CRUEL PASSION
(வயது வந்தவர்கட்கு மட்டும்)
10-30, 2-00, 4-00

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**STL மினிசினிமா**
காட்சி 10.30- 2.30 -4.30
**Onnar Nutha**
(பாலஸ்தீன சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்திய இளைஞர்களின் வீர வரலாறு, திகிலூட்டும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்)

**மொடேர்ண் மினி சினிமா**
ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு அருகாமை
CRUEL PASSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
தினசரி 3 காட்சிகள்

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி 10-30, 2 30
முரளி- லக்ஷ்மி- இளவரசி
ஜெய்சங்கர் - தேங்காய் சீனிவாசன்
Y .G. மகேந்திரன் நடித்த
**"அந்தஸ்து"**
காதல் ஓவியம் (புதிய வெளியீடு)

**லிடோ சினிமா**
சுதாகர் - ராதிகா நடித்த
**ஆயிரம வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

**ஸ்ரான்லி மினி**
'5X5, திரையில்
10-30 மட்டும்
மோகன், ஆனந்தபாபு, ரேவதி, லஷ்மி நடித்த
**"உதய கீதம்"**
(சிறந்த படால்கள் நிறைந்தபடம்)
2.30 மட்டும்
ஆனந்தபாபு கார்த்திக் அனுராதா நடித்த
**புயல்கடந்த பூமி**
திரைப்படங்கள் மூலப் பிரதி களிலிருந்து பிரதி பண்ணிக்கொடுக்கப்படும்.


## றமழான் சிந்தனை

இறைவனுக்குப் பொருத்தமானதையும், இணக்கமானதையும் எவர்கள் பின்பற்றுகிறார்களோ [அவர்களை] அல்லாஹ் அதன் மூலமாக ஈடேற்றம் காணும் வழியில் செலுத்துகின்றான். இன்னும் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி தன்நாட்டத்தால் ஒளியின் பக்கம் கொண்டு விடுகிறான். அவர்களை நேரான வழியில் செல்லும்படி செய்கிறான்.

[—திருக்குர்ஆன் 5:16]

நோன்பு துறக்கும் நேரம்: [மஃறிப்] 6 22
நோன்பு ஆரம்பிக்கும் நேரம் (ஸஹர் முடிவு) 4 18

—தொகுப்பு ஸச்சி

## ஓய்வூதியம் பெறுவோர் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

மலாயா, சிங்கப்பூர் பென்சன் பெறுவோருக்கு, மேமாதத்துக்குரிய பென்சன்பணம் இம்மாதம் 3ம்திகதி திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் வைத்து காசோலையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கு இம்மாதம் 13ம் திகதி யாழ். பொலிஸ் நிலைய விடுதியில் இயங்கும் இலங்கைவங்கிக் கிளையில்வைத்து ரொக்கப் பணமாக வழங்கப்படவுள்ளது. (மா)

## இயற்கை

[3ம் பக்கத் தொடர்ச்சி]

நிதி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உதவியுடன் இயற்கை அழிவுகளிலிருந்து தனது நாட்டு மக்களைக் காப்பாற்ற முயலவேண்டும். சீனாவில் குவாங்ஹோ நதி காலம் காலமாகப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வந்தது. இன்று சீனாவில் பெரிய நதிகளால் ஏற்படும் வெள்ளப்பெருக்குகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. நதிகள் மக்களின் வாழ்வை மேம்படுத்த நன்கு பயன்படுத்தப்படுவதைக்காணலாம். இதேபோலப் பல உதாரணங்களை உலகின் பல பகுதிகளிலிருந்து குறிப்பிடலாம். பங்களா தேசத்தில் இயற்கை அழிவுகளாலும் அதன் விளைவால் ஏற்படும் சேதம் குறைக்கப்படாவிட்டால் மல்தூசின் தனது குடிசனக்கோட்பாட்டில் குடிசனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்த இயற்கை சக்திகள் இயக்குவதாக குறிப்பிட்டதை ஏற்க வேண்டியதாக இருக்கும்.


**ஆனந்தி வீடியோ சினிமா**
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி ஆர் -சரோஜாதேவி நடிக்க
**நான் ஆணையிட்டால்**

**சிவன் மினி சினிமா**
K. K. S. ரோட் சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
10-30 2-30
எம். ஜி. ஆர் - சரோஜா தேவி நம்பியார் - அசோகன் நடித்த
**தெய்வத்தாய்**

**ஹரன் சினிமா**
தினசரி 10-30 — 2-30
850 நாட்களுக்குமேல் சாதனைபடைத்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**விதி**
(கலர்)


## இவ்வாரம் உங்கள் பலன்

### இன்று

மாதம்; வைகாசி
திகதி- 20 (1985-6-2)
வாரம்- ஞாயிறு
திதி- சதுர்த்தசி முற்பகல் ... வரை
நக்ஷத்திரம்- விசாகம் காலை 7-27 மேல்அனுஷம்

**மேடம்**

முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித்தலையீடு குழப்பத்தைஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப்போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், உடல்நலம் பேணவும், இவ்வாரம் அமைதி வேண்டும்.

**இடபம்**

எண்ணம்போல் வாழ்வு மலரும், சமூகத்தில் மதிப்பு உயரும், உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு உண்டு. குடும்பவாழ்வில் சுமுக உறவு உண்டு, உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தைத்தரும்.

**மிதுனம்**

இனத்தவரின்ஆதரவு தாராளமாக கிடைக்கும். குடும்பத்தில் மோதல்கள் ஏற்படும். மனதில் விரக்திதோன்றும் நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

**கடகம்**

தன்மானத்துடன் தனவரவிற்கும் இடமுண்டு. குடும்பத்தில் சென்றல் வீசும், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். நுட்பமானவேலைகளில் ஈடுபடுவோருக்குமதிப்பு. மாதுருவழியால் கவலைகள் தோன்றககூடும்.

**சிங்கம்**

கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் பயனுள்ள சந்திப்புகள் நிகழும். இருப்பிடமாற்றங்களுக்கான ஆலோசனைகளும் உருவாகும் வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

**கன்னி**

வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு பலவழியிலும் முயற்சி செய்வீர்கள். பணவிடயத்தில் நல்ல நிலைமைகள் ஏற்படும். எதிர்பாராத வரவுக்கும் இடமேற்படும் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. சகோதரர் ஒருவர் உதவிக்கு வருவர்.

**துலாம்**

சிக்கல்கள் சிலந்தி வலைப் பின்னல் போல் இருக்கும் தற்பெருமையின் மூலம் பணவிரயத்திற்கு இடமுண்டு விவசாயிகள் அதிருப்தி அடைவர் பூமிக்பிணக்குகளைத் தவிர்க்கவும் ஆத்திர உணர்வையும் தவிர்க்கவும்.

**விருச்சிகம்**

ஆத்திரப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழக்க இடமளிக்கும் வேண்டியவர்களைப் பகைத்துக்கொள்ளநேரிடும், மேலதிகாரியுடன் மோதலைத் தவிர்க்கவும் உடல்நலம் சிறிது பாதிக்கும். அமைதி வேண்டும்.

**தனுசு**

குடும்பத்தில் குதூகலநிகழ்ச்சிகள் இடம்பெறும் வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம் பணவரவிற்கும் இடமுண்டு உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டு நீண்டநாள் நண்பர் ஒருவரையும் சந்திக்கநேரும்.

**மகரம்**

நினைத்த காரியத்தில் தடை சிலரின் கண்டனங்களுக்கு இலக்காக நேரிடும். மனத்திடம் விரும்பத்தககது குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும். அமைதியாக இருக்கவும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கல்லெடுப்பு - சபிண்டீகரண அழைப்பு

### பொ. இ. நடராஜாக்குருக்கள்



கல்லெடுப்பு 5-6-85-ம் திகதி புதன்கிழமை காலை. சபிண்டீகரணம் 6-6-85-ம் திகதி வியாழக்கிழமைபகல். இடம்; கொய்யாத்தோட்டம், இருபாலை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

இங்ஙனம்
மனைவி, மக்ககள்.

3574

## 1ம் வருட நினைவஞ்சலி

### திருமதி குஞ்சுப்பிள்ளை (குஞ்சு) சிவசுப்பிரமணியம் (தவராசா)

மலர்வு: 8-7 1941 உதிர்வு: 13-6-1984
திதி: 2-6-85



எங்கள் இல்லத்து ஒளி விளக்காய்த் திகழ்ந்த அன்புத்தெய்வமே! நீங்காத உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் என்றுமே நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக வருடந்தோறும் இறைவனடி எய்திய வைகாசி பூரணை தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு நவிண்டில் குலனைப் பிள்ளையார் கோவிலில் தங்கள் திருநாமத்திற்கு நித்திய பூஜை நடைபெறும்.

இப்படிக்கு
உங்கள் அன்புக் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உடன் பிறப்புக்கள், மச்சான்மார், மருமக்கள், சுற்றத்தார்.

ஸ்ரீ அம்பாள் அரிசிஆலை,
நவிண்டில், கரவெட்டி. 3465

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் கைலாசபிள்ளை குழந்தைவேலு



தோற்றம்:
16–07–1916

மறைவு:
13–06–1984

திதி:
02–06–1985

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 3588

## நன்றி நவிலல்

### I. P துரைரத்தினம் அவர்கள்

திரு I. P. துரைரத்தினம் அவர்களின் மரணச்சடங்கில் பங்குகொண்டோர், மலர்வளையங்கள் வைத்தோர், அனுதாபச்செய்திகள் அனுப்பியோர், இன்னும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிபுரிந்தோர் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் தனிப்பட்ட முறையில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

திருமதி I.P. துரைரத்தினமும் குடும்பத்தினரும்
(3597) தெல்லிப்பளை

## பயிற்சிமுடிந்த ஆசிரியர்கள் இம்மாதம் 30ம் திகதி வரை பதவியேற்கலாம்

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர்களாக நியமனம் பெற்று பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு இம் மாதம் 30 ம் திகதிக்குள் பதவி ஏற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. க.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கிராகம, அழுத்கம, மகாரகம ஆகிய இடங்களிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்கப்படவுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை காரணமாகவும், போக்குவரத்து வசதியின்மையாலும் இந்த ஆசிரியர்கள் இம் மாதம் 30 ம் திகதிக்குள் வந்து தமது பதவிகளை ஏர்பதற்கான அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## உண்ணுவிரதம்

[யாழ்ப்பாணம்]

அன்றீஸ் கம்பனியைச் சேர்ந்த வாகனங்கள் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து, அக்கம்பனியைச் சேர்ந்த சுமார் நாலாயிரம் தொழிலாளர்கள் நாளை 3 ம் திகதி தொடக்கம் உண்ணுவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## குடிநீர்வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் அங்குள்ள மக்கள் பெரும்கஷ்டமுறுவதாக யாழ். அரசாங்க அதிபருக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் யாழ் அரசாங்க அதிபரைச்சந்தித்து, குடிநீர்க்கஷ்டத்தைப் போக்குவதற்கு சாரப்பிட்டியில் இருந்து குடிநீர் பெற்றுவிநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக யாழ். சமூகசேவைப்பகுதியின் உதவியையும் முன்னேற்றக்கழகம் கோரியுள்ளது. (மா)

## இரு நாட்களில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இதுபற்றி எமது நிருபர் அந்த அதிகாரியுடன் தொடர்புகொண்டபோது கடந்த சில நாட்களாக பலர் 'விசா'வுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும் இந்த விண்ணப்பங்கள் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளினால் மிக நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே விசா வழங்கப்படுகிறது. அத்துடன் பிரிட்டன் குடியகல்வு குடிவரவு அதிகாரிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய ஆவணங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மாத்திரமே இந்த விசா வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

விசா வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## இவ்வார பலன்..

(7ம் பக்கத்தொடர்ச்சி)

**கும்பம்**

மதி நுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள் பயன் தரும் பிரயாணம் ஒன்று நிகழலாம் அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவழி நாட்டமுண்டு

**மீனம்**

இதயத்தில் மகிழ்ச்சி தோன்றும் உறவில் இறுக்கமேற்படும் புதியவர் தொடர்பால் புதிய பாதை தென்படும். தொழில் புரியும் இடத்திலும் நன்மைகள் ஏற்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஆய்வுகூடத்தில் கொள்ளை

[வவனியா]

நெடுங்கேணி மகாவித்தியாலய ஆய்வு கூடம் உடைக்சப்பட்டு இரசாயனப் பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

## செட்டிகுளம்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களுக்கு தயங்காது தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி திரு. சொர்ணபாலா கூறினார்.

இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எதிராகவே பிரஜைகள் குழுவின் அலுவலகம் உள்ளது.

## தொடர்ந்தும்...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் தனசரி கல்வீச்சுக்கிலக்காகி வருவதால் பிரயாணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதுடன் வாகனங்களுக்கும் பலத்த சேதமடைவதாகப் புகார் செய்யப்படுகிறது.

தினசரி கல்வீச்சுக்கிலக்காகும் வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்கள் குறித்து அதன் உரிமையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் அதனால் ஏற்படும் நஷ்டம் குறித்து கவலையடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்றும் சகல வாகனங்களுக்கும் கற்கள் வீசப்பட்டதாம். [மா]

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

குறிப்பிடப்பட்ட லொறியைத் தடுத்து நிறுத்தியவர்கள், சாரதியையும் கிளினரையும் பலமாக வாள்களால் தாக்கி விட்டு லொறியைக் கடத்திச்சென்றதாகவும், வாள் வெட்டுக்கிலக்கானவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்க பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. [மா]

## திருமலையில்...

[ ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டதாம்.

இதேவேளை குச்சவெளியிலுள்ள ஜேர்மன் வானொலி அஞ்சல் நிலையத்தில் புகுந்தவர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க இயந்திரசாதனங்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இவர்கள் மேற்படி நிலையத்தின் முன்பகுதியையும் சேதமாக்கியுள்ளார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

## செய்திப்பத்திரிகை வாகனமும் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வெளியாகும் தினசரி செய்திப்பத்திரிகைகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்த வாகனம் ஒன்று இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது

கொழும்பிலிருந்து வேறொரு வாகன மூலம் வவனியா கொண்டுவந்து சேர்க்கப்பட்ட பத்திரிகைகளையாழ்ப்பாணத்திலிருந்து அதற்கெனச் சென்ற வாகனம் எடுத்துக்கொண்டு வரும் வழியில் பரந்தனுக்குப் கரடிப்போக்குச்சந்திக்குமிடையில் வைத்து இனந்தெரியாத மூவர் கடத்திக் சென்றுவிட்டதாகவும் பின்னர் சற்றுத் தூரத்தில் பத்திரிகைக்கட்டுகள் தனிமையாகக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தங்கம் சேகரிப்பு: 'புளட்' இயக்கம் மறுக்கிறது

[யாழ்ப்பாணம்]

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் [புளட்] வீடு வீடாகச் சென்று தங்க நகை சேகரிப்பதாக சில இடங்களில் வெளிவந்துள்ள தகவல்கள் குறித்து அக்கழகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுவரை மேற்படி கழகத்தைச் சேர்ந்தவர்கள் பொது மக்களிடமிருந்து தங்க நகை சேகரிப்பில் ஈடுபடவில்லை என்றும் 'புளட்' விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் நீர்வேலிச்சந்தியில் தோழமை இயக்கம் ஒன்றால் நிறைவேற்றப்பட்ட உரிமை கோரப்பட்ட மரண தண்டனைக்கும் தமிழீழ விடுதலைக்கழகத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவ்க்கப்பட்டுள்ளது. [மா]

## கொழும்பு சென்று மீட்கலாம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நகைகளை அடைவு வைத்து அவற்றை மீட்க முடியாத நிலையில் இருந்தவர்களின் கஸ்ட நிலை நீங்கயுள்ளது.

இவர்கள் கொழும்பு சென்று தமது நகைகளை மீட்டுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவனியா.-.

(1ம் பக்கத் தொடர்சசி)

சத்தினால் வெளியேறி வருகிறார்கள் என்று 'ஈழநாடு' 29-5-1985ம் திகதி இதழில் வெளியானசெய்திதவறானது என்று வவனியா அரசாங்க அதிபர் திரு லோகேஸ்வரன் அறிவித்துள்ளார். குறித்த பகுதியைச்சேர்ந்த மக்கள் அச்சம் கொண்டு வெளியேறத் தேவையில்லையென்றும் அவர் அறிவித்துள்ளார்.

## எரிபொருள்....

(1-ம் பக்கத் தொடர்சசி)

கூறப்படுகிறது

எரிபொருட்கள் நான்குமடங்கிலும்கூட விற்பனை செய்யப்படுவதாகவும், கூடுதல் விலைக்கும் எரிபொருள் பெறமுடியாதிருப்பதாக கூறப்படுகிறது.

மினி பஸ் கட்டண உயர்வினால் வடபகுதி மக்கள் பலத்த கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளார்கள்.

## இன்று தொடங்கும் அமைதிப் பிரார்த்தனையில் ஆசிரியர்களும் பங்குபற்றுவர்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதி வேண்டி இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் இன்று ஞாயிறு தொடக்கம் நாளை மறுதினம் 4ம் திகதி வரை முற்பகல் வேளையில் நடத்தவிருக்கும் பிரார்த்தனையில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கமும் ஈடுபடவுள்ளது.

பிரார்த்தனை நடைபெறும் இடங்களில் அவ்வப்பகுதிகளில் உள்ள இலங்கை ஆசிரியர்சங்க உறுப்பினர்களைக்கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இவ்வமைதிப் பிரார்த்தனையை வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு விஸ்தரிக்கவும் தாம் தீர்மானித்திருப்பதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார். [மா]

## ரஜீவ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மின்றி தனியாக பேச்சுநடத்துவார்கள். இரண்டாவதுகட்டப் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை ஜனாதிபதிக்கு உதவியாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மற்றும் உதவியாளர்கள கலந்துகொள்வார்கள்.

இந்த இரு கட்டப்பேச்சுவார்த்தைகளையும் முடித்துக் கொண்டு இரு தலைவர்களும் பங்களாதேஷுக்கு செல்வார்கள்.

பங்களாதேஷ்சென்று அங்கு புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர் இலங்கை ஜனாதிபதி அவசியமேற்படின் வெளியுறவு கொள்கை வகுப்புக்கமிட்டித் தலைவர் திரு, ஜி பார்த்தசாரதியையும், வெளியுறவு செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியையும் சந்தித்து பேசலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தற்போது புதுடில்லி சென்றுள்ள அவரின் பிரதான வெளிவிவகார ஆலோசகர் திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்காவை சிலதினங்களுக்கு இந்தியாவில் தங்குமாறு கூறப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

ரஜீவ்-ஜே ஆர். பேச்சு வார்த்தைகளில் இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக பல முக்கிய விடயங்கள் ஆராயப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் சந்திப்பின் பின்னரும் அதிகாரிகள் மட்டத்தில் இப் பேச்சுக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் படலாமென்றும். நம்பப்படுகிறது.

இன்று காலை இலங்கை ஜனாதிபதி புதுடில்லியில் மகாத்மா காந்தி, நேரு, திருமதி இந்திரா காந்தி ஆகியோரின் சமாதிகளுக்கு அஞ்சலி செலுத்துவார்.

இலங்கை ஜனாதிபதி நாளை மாலை இலங்கை திரும்புவார்.

## பண்டாரி

(1-ம் பக்கத் தொடர்சசி)

ஆயுதங்கள் வருவதனை தடுப்பதற்கு தனியாகவோ அல்லது கூட்டாகவோ ரோந்து சேவையை மேற்கொள்ள வேண்டும் என்று ஜெயவர்த்தன இந்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கின்றார்

இலங்கையில் இடம்பெறும் இரத்தக் களரிக்கு முதலில்முற்றுப்புள்ளி வைத்து சுமுகமான அரசியல் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்தி இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

ஐக்கிய இலங்கை அமைப்பினுள் இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் என்பதனை இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி இம் மாநாட்டில் வலியுறுத்துவார் என்றும் இருநாட்டுத் தலைவர்களும் மனம் திறந்து பேசுவார்கள் என்றும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## மீண்டும்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பேரில் இத் தபால் அலுவலகம் திறக்கப் படவுள்ளது. (மா)


## மரண அறிவித்தல்

### Dr. ஞானர் சோமசுந்தரம்

Dr. போல் ஞானோதயம் (ஞானர்) சோமசுந்தரம் மறுமைக்குள் பிரவேசிக்கிறார் இவர் காலஞ் சென்ற கனம் சோமசுந்தரம் போதகரது மைந்தனும், யோனின் பிரிய கணவனும், பாஸ்கரன் (அவுஸ்ரேலியா), பத்மினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விஸ்வநாதன், டெசிமா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனருமாவார். 2-06-85ம் திகதி (இன்று) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது செம்மணி வீதி இல்லமான பழைய குருமனையில் இடம்பெறும் இறுதி ஆராதனையின்பின் அயலிலுள்ள நல்லூர் தூய யாக்கோவு தேவாலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 3594

## மரண அறிவித்தல்

### மு. சீ. செல்லத்துரை

தோற்றம்: 22-8-1915 மறைவு: 30-5-1985

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த மு. சீ. செல்லத்துரை அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (இன்று 2-6-85) காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஈமக்கிரியைகள் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

திருமதி அன்னப்பிள்ளை செல்லத்துரை
கமலாம்பிகை மார்க்கண்டு
கமலநாயகி புனிதசபாபதி
திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்
மு. சீ. கந்தப்பு
மு சீ. சோமசுந்தரம்

கமலவாசம்
கரவெட்டி
1-6-85 3593


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 66-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126